
Laodicean Times

லவோதிக்கேயன் டைம்ஸ்

1916 - 1879 ரீ - பிரிண்ட்ஸ் தமிழாக்கம்


தொகுப்பு 9 தொகுதி 3 அக்டோபர் - டிசம்பர் 2019


R 5414

## “உபயோகமளிக்கின்ற மேஜை உரையாடல்கள் ”

## “PROFITABLE TABLE TALKS’

**ஆதார வசனங்கள்** : லூக்கா 14:7–24

**திறவுகோல் வசனம்** : “தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்” – லூக்கா 14:11.

நன்கு வளர்ச்சியடைந்த கிறிஸ்தவ ஜனங்களில் , அதாவது கணிசமான எண்ணிக்கையிலான வேத மாணவர்கள் சமீபகாலமாக தங்களுடைய உணவருந்தும் வேளையில், வழக்கத்திற்கு மாறாக வேதாகமத்துக்கடுத்த உரையாடல்களை மேற்கொள்கின்றனர். நாம்அறிந்த அநேகர், இதனால் ஆதாயம் அடைகிறதைக் காணமுடிகிறது. மாம்சத்துக்கான ஆகாரம் உண்ணும் அதேவேளையில், பரலோக உணவில் பங்குபெறுவது முறையானது. உலகக் காரியங்களிலிருந்து, மேலான பரலோகக் காரியங்களில் சிந்தனைகளை உயர்த்திக்கொள்வது அனைத்து வழியிலும் அனுகூலமளிக்கும். இதுவே இயேசுவின் வழக்கமாயிருந்தது என்று நாம் காண்கிறோம்.

ஒரு பிரபலமான பரிசேயனோடு நம் குரு விருந்தாளியாக உணவருந்தும்போது பேசினவை, பிறரைக்காட்டிலும் அவருக்கே பொருத்தமானதாக இருப்பதை இப்பாடம் காண்பிக்கிறது. வந்திருக்கிற விருந்தினர்கள் கனத்துக்குரிய பிரதான இருக்கைகளை சுயநலமாக தெரிந்தெடுத்ததை அவர் கவனித்து, ஒரு உவமை வழியாக அவர்களைக் குறைகூறினார். ஏனெனில் இந்த சுயநலஆவி, அவர்கள் நம்பியிருந்த இராஜ்யத்தின் மேன்மைகளுக்கு தகுதியுடையவர்களாகவோ, அல்லது தகுதியற்றவர்களாகவோ, அவர்களுடைய குணாதிசயங்களைக் கட்டுவதில் மாறுதலை ஏற்படுத்தும் என்பதை அவர்கள் காணவேண்டுமென்று அவர் எண்ணினார்.

ஒரு சமுதாய நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருக்கும்போது, அழைக்கப்பட்டவர்கள் மிக கீழான இடத்தை, ஒதுக்கமான இடங்களை தாழ்மையோடு தெரிந்தெடுக்கவேண்டும். ஏனெனில் தங்களைக் காட்டிலும் அதிக மதிப்புக்குரியவர்கள் எத்தனைபேரை விருந்தளிப்பவர் அழைத்திருக்கிறார் என்று அறிந்திருப்பதில்லை. ஆகவே அவர்கள் மிக தாழ்மையான இருக்கைகளில் அமர்ந்திருப்பதை விருந்தளிப்பவர் கவனிப்பாரானால், அவர்களை அதிக முக்கியத்துவம் வாய்ந்த இடத்திற்கு வரச்சொல்லி அழைக்கக்கூடும். இவ்வாறு அவர்கள் கனப்படுத்தப்பட்டிருந்து, அந்த கனம் முறையான வகையில் அவர்களை சென்றடையும். ஆனால் முதன்மையான இடத்தை தாமாக பிடித்துக் கொள்ளும்பொழுது, விருந்தளிப்பவரை அதிருப்திப்படுத்தவோ அல்லது தாழ்மையான இடத்துக்கு செல்லும்படி கேட்டுக்கொள்ளப்படவோ வாய்ப்பிருக்கிறது. அதிக தகுதியுள்ளவர் என ஒருவரைக்கருதி, அவருக்கு அதிக கனத்தைக் கொடுக்கக்கூடும். இவ்வாறு அவர் குறிப்பிடத்தக்கஅளவு அவமதிப்புக்குள்ளாவார்.

இந்தக் கொள்கையையே பிதாவும், தாமும் கொண்டுள்ளதாக நம் போதகர் அறிவித்தார். அதன்படி, “தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன்

### இம்மாத வெளியீட்டில்


| | | பக்கம் |
|---|---|---|
| .... உபயோகமளிக்கின்ற மேஜை உரையாடல்கள் | ... | 1 |
| .... சீரான மனநிலையை அடைவதன் முக்கியத்துவம் | ... | 5 |
| .... பரிசுத்த ஸ்தலத்திலுள்ள ஆவியால் ஜெனிப்பிக்கப்பட்டோர் | . | 6 |
| ... நம் கரத்திலுள்ளவைகளை தேவன் பயன்படுத்துதல் | ... | 7 |
| .... புத்தியுள்ள ஆராதனை | ... | 11 |



*லவோதிக்கேயன் டைம்ஸ் தேவனுடைய வார்த்தையின் ஐசுவரியங்களை லவோதிக்கேய தூதனின் படைப்பான ரீ–பிரிண்ட்ஸின் தமிழாக்கம் வாயிலாக புரிந்துகொள்ளத்தூண்டுவதில் சகோதரர்களுக்கான ஊழியமாக வெளியிடப்படுகிறது. தொடர்புக்கு – தமிழ்நாடு வேத மாணவர்கள், M- 1043 ஹவுசிங் யூனிட், கணபதி மாநகர், கணபதி, கோயம்புத்தூர் – 6. செல் : 9344 144000*

உயர்த்தப்படுவான்'' என்றார் – லூக்14:11. அப்போஸ்தலர்களும் இதே கருத்தையே எடுத்துரைக்கின்றனர்; ''தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'' – யாக் 4:6; ''ஆகையால் ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்'' – 1பேது5:6.

தன்னலத்தைத் தேடுவோர், பெருமையின்ஆவியை உடையோர், மேலான ஸ்தானத்தை பெறும்பொருட்டு கர்த்தருக்குரிய நம்பகத்தன்மையைப் பெறமுடியாது என்பதே இதன் கருத்தாகும். அப்படிப்பட்ட ஆவியை உடையவர்கள் தங்களுக்கும், அவருடைய ஊழியத்திற்கும் தீங்கை வருவித்துக்கொள்வார்கள். அதற்கு மாறாக, தாழ்மையான மனதுடையவர்களையும், உயர்த்தப்படுவதினால் காயமடையாதவர்களையும் இராஜ்யத்தின் வகுப்பாராக அழைக்கப்பட்டவர்களாக, வருங்காலப் பணியை விட்டு விலகிச்செல்லும் அபாயத்திலில்லாதவர்களையும் தேடிக்கொண்டிருக்கிறார்.

இயேசு தம்மை விருந்துக்கு அழைத்தவனை நோக்கி, அவரைப் பாராட்டும் விதமாக கூறினார் ; ''நீ விருந்து பண்ணும்போது.. உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்து ஜனங்களையாகிலும், ஐசுவரியமுள்ள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம்; அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள், அப்பொழுது உனக்குப் பதிலுக்குப் பதில் செய்ததாகும். நீ விருந்துபண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்குப் பதில் செய்யமாட்டார்கள்; நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் உனக்குப் பதில் செய்யப்படும் என்றார்'' –லூக்14:12–14.

இயேசுவையும் அவரது சீஷர்களையும் விருந்துக்கு அழைத்திருந்ததன்மூலம் மிக கருணையுள்ள காரியங்களை பரிசேயன் செய்திருந்தான். அவர்கள் ஏழைகள் என்றும், அவர்களால் பதிலுக்கு திரும்பச்செய்ய முடியாது என்றும் அந்த பரிசேயன் நன்கு அறிந்திருந்தான். அவருக்கு நம் போதகருடைய வார்த்தைகள் ஆறுதலை அளித்திருக்கும். எல்லா நிகழ்வுகளிலும் அவர்கள் ஒரு நேர்த்தியான கோட்பாட்டை ஏற்படுத்தினர். அது, ஐசுவரியவான்களும் தரித்திரருமாகிய எல்லோராலும் ஒரேவிதமாக கிரகித்துக் கொள்ளப்பட்டதாக இருந்தது, தற்கால ஜீவியத்தில் நம்முடைய நல்ல செய்கைகளுக்காக நம் வெகுமதிகளை நாம் பெறுவோமானால், வருங்காலத்தில் எப்படி நமக்கென்று ஏதாகிலும் வந்தடையும் ?

ஆகவே நம் குருவின் அறிவுரையைப்பின்பற்றி, நமக்கு பதிலுக்கு பதில் செய்யமுடியாத நிலையிலிருப்போர்க்கு உதவிகளைச்செய்ய தேடுவோமாக. இரக்கத்தின் அடிப்படையில் செய்த அப்படிப்பட்ட காரியங்களை தேவன் பாராட்டுவதோடு, நீதியினிமித்தமாக செய்யப்படும் காரியங்களுக்கும் பொருத்தமான வெகுமதியைத் தருவார் என்று நிச்சயித்திருப்போமாக. அதேசமயத்தில், நம் நண்பர்களையோ அல்லது அயலாரையோ அல்லது உறவினரையோ அழைத்தால், அவர்கள் நம்மை பதிலுக்கு அழைக்கக்கூடும், எனவே இது தவறு என நம் குரு பேசினதாக நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக, நண்பர் அயலார் உறவினர்க்கு விருந்தளிப்பதனால் பரலோகத்தில் எந்த பொக்கிஷத்தையும் சேர்க்கமுடியும் என எண்ணிவிடக்கூடாது.

இயேசு வாழ்ந்த நாட்களைக் காட்டிலும், தற்போது ஏழைகளையும் முடவரையும் ஊனமுற்றோரையும் அழைப்பதற்கு அதிக காரணமுண்டு. பொதுவாக எல்லோரும் ஒத்துக்கொள்கிறபடி, இன்றையநாளில் ஏழைகள், முடவர், குருடர், ஊனமுற்றோரிடத்திலான தங்களது கடமையை நாகரீகமடைந்த ஜனங்கள் புரிந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். பொதுவான வரிவிதிப்பின்மூலம் பொதுமக்களுடைய பணத்தால், அவர்களுக்கென வீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் முறையான ஆவியில் ஏழைகளுக்கு பணஆதரவு கொடுக்க யார் முன்வந்தாலும் அவர்கள் தேவனுடைய பார்வையில் மெச்சத்தக்க செயலை செய்கிறார்கள். ஆனால் மனதார அன்றி, வற்புறுத்தலின் காரணமாக அப்படிப்பட்ட வரிகளை யார் செலுத்தினாலும், எந்த நன்மதிப்பும்பெற தகுதியற்றவர்களென தங்களை வெளிப்படுத்துகின்றனர். ஆயினும் இப்படிப்பட்ட நிறுவனங்கள், நல்ல தன்மையில் நடத்தப்படுவது, நியாயமான பாதுகாப்பு அளிப்பதோடு, தேவைப்படும்போது நமக்கும் நம் உறவினர்களுக்கும் நன்மை பயப்பதாய் இருக்கும்.

இப்படிப்பட்ட நிலைமைகளின்கீழ், இந்த ஏற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு தருவதில் குறைவுபடுவதும், அப்படிப்பட்ட ஏற்பாடுகளை மறுப்பதும், அவர்கள் செலுத்துகின்ற வரிக்கும் மேலாக, கூடுதலான செலவுக்கு நண்பர்கள் மற்றும் உறவினர்களிடம் தனிப்பட்ட ஆதரவை எதிர்பார்ப்பதும் ஏறக்குறைய தவறாகும். வேத வசனங்கள் அனைத்தும் நீதிநியாயத்தின் ஆவியை முதலாவதாகவும், பின்பு அன்பு, இரக்கம் மற்றும் கருணையின் ஆவியை நீதிக்கு அப்பாற்பட்டு கற்பிப்பதுபோல் தென்படுகிறது.

ஆனால் இது நாம் பெற்றிருக்கிற பரிசுத்தஆவியின் அளவின் அடையாளமாக, தன்னார்வத்தோடு செய்யவேண்டுமே தவிர, வலுக்கட்டாயத்தினாலல்ல.

**தேவனுடைய மாபெரும் விருந்து**

அவரோடுகூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவன், இயேசுவின் கருத்துக்களைக்கேட்டு, ஸ்தாபிக்கப்படப்போகும் இராஜ்யத்தில் மாபெரும் விருந்தில் பங்குபெறுவது பாக்கியமானதாயிருக்கும் என்று குறிப்பிட்டான். இவ்வார்த்தையை இயேசு பிடித்துக்கொண்டவராய், ஒரு உவமையை மற்றுமொரு பிரசங்கமாக போதித்தார். வழக்கம்போல் அவருடைய உவமை பிரசங்கம், தேவனுடைய இராஜ்யத்தைக் குறித்ததாகவே இருந்தது. ஒரு மனிதன் பெரிய விருந்தை ஆயத்தம்பண்ணி, அநேகரை விருந்தாளிகளாக அழைப்பித்தான். விருந்துவேளை வந்தபோது, தம் ஊழியக்காரர்களை அழைக்கப்பட்டவர்களிடத்திற்கு அனுப்பி, ''எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது வாருங்கள்'' என்று அறிவிக்கும்படி சொன்னான். ஆனால் அவர்களெல்லாரும் போக்குச்சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன்: நான் ஒரு வயலை வாங்கியிருக்கிறேன், அதைப் பார்க்கச் செல்லவேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் என்றான். வேறொருவன்: நான் ஐந்தேர் மாடு வாங்கியிருக்கிறேன், அவற்றை சோதித்துப் பார்க்கவேண்டும், என்னை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்கிறேன் என்றான். வேறொருவன்: நான் சமீபத்தில் திருமணம் செய்திருக்கிறேன், அதினால் என்னால் வரமுடியவில்லை'' என்றான். அந்த ஊழியக்காரன் திரும்பிவந்து, நடந்தவைகளை எஜமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீட்டெஜமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனை நோக்கி, நீ சீக்கிரமாய் பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டி வா என்றான்.

இந்த உவமையின் அர்த்தத்தை வேறெங்கோ சென்று தேடவேண்டியதில்லை. தேவன் உண்மையாகவே ஒரு பெரிய விருந்தை ஆயத்தம் பண்ணியிருந்தார். ஏற்றவேளையில் அப்படிப்பட்ட உயரிய ஆசீர்வாதம் அவர்களுக்கு திறக்கப்பட்டிருக்கும் என்று யூத தேசத்துக்கு தம் வார்த்தையை அனுப்பியிருந்தார். தேவனுடைய இராஜ்யத்தின் அங்கத்தினர்களாக, மேசியாவோடுகூட பங்குபெறும் சிலாக்கியமே அதுவாகும். ஆயினும் இயேசு அவர்களிடத்தில் பிரவேசித்து, விருந்து பரவலாக கொடுக்கப்படும் நேரம் வந்தபொழுது, விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தவர்கள் அலட்சியமாயிருந்தனர்.

பரலோகஇராஜ்யம் சமீபித்திருக்கிறதை இயேசுவும் அவரது சீஷர்களும் சில காலம் அறிவித்துவந்தனர், அதைக்கேட்டு விசுவாசித்தவர்கள் அதோடு ஐக்கியம் ஏற்படுத்திக்கொள்ளவும், விருந்துக்கு வருவதற்கும் துரிதப்படவேண்டும். இவ்வாறு ஆசீர்வாதத்தால் தங்களது பங்கை அடையவேண்டும். ஆனால் அழைக்கப்பட்டவர்களோ, பணப்பிரியராயும், பேராசைக்காரராயும் இருந்தனர். இராஜ்யத்தின் செய்தியை அவர்கள் கேட்டபொழுது, நான் என் உலகின் வாய்ப்புக்களில் முழு மூச்சாக இருக்கிறேன் என்று அவர்கள் கூறினர். ஆகவே அவர்கள் இயேசு மற்றும் அப்போஸ்தலர்கள் மூலமாக அவர்களுக்கு நீட்டிக்கப்பட்ட தேவனுடைய அழைப்பை அவமரியாதை செய்தனர்.

''பரிசுத்த ஜனங்களாக'' குறிப்பாக தங்களை பிரகடனப்படுத்திக்கொண்ட பரிசேயர்கள் மற்றும் வேதபாரகர்களே விசேஷித்தவிதமாக அழைக்கப்பட்டிருந்தனர். இவ்வுவமையில், முதலாவதாக அழைக்கப்பட்டிருந்தவர்கள் அதை நிராகரித்ததால், பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் இருந்த பிறருக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. அதாவது, பிரசங்கிக்கப்பட்ட சுவிசேஷத்தை ஏழைகள் ஏற்றுக்கொண்டதை இது பொருள்படுத்துகிறது. இராஜ்யத்தைப்பற்றி அறிவிக்கப்பட்டதும், ஆயக்காரரும் பாவிகளும் நம் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள், அவர்களைக் காயப்படுத்துகின்றதும், பாவம் நிறைந்த பழக்கவழக்கங்களையும் விட்டுவிடும்படியும், பாவத்திற்கான மன்னிப்பை ஏற்றுக்கொள்ளும்படியும் அழைக்கப்பட்டார்கள். மேலும் தேவனுடைய வாரிசுகளாயும், தேவ வாக்குத்தத்தமாகிய அவர்களது மீட்பராகிய இயேசுகிறிஸ்துவுக்கு உடன் வாரிசுகளாயும் ஆகும்படி அழைக்கப்பட்டனர்.

இயேசு மற்றும் அவரது சீஷர்களால் போதிக்கப்பட்ட ஏறத்தாழ எல்லா பிரசங்கங்களும், பெந்தெகொஸ்தே நாள் வரையிலும் அதற்குப்பிறகும், இஸ்ரயேலில் ஆயக்காரரும் பாவிகளுமாயிருந்த ஏழைகளுக்கே சென்றடைந்தன. அவர் பாவிகளை ஏற்றுக்கொள்கிறார், அவர்களோடு போஜனம் பண்ணுகிறார் என்று, நம் கர்த்தரை நிராகரித்த பரிசேயர்களால், அவருக்கெதிராக குற்றஞ்சாட்டப்பட்டது.

**மாபெரும் விருந்து, செழிப்பான ஆசீர்வாதங்களை பிரதிபலிக்கிறது**

மாபெரும் விருந்து உவமையில், சபைக்கான

செழிப்பான ஆசீர்வாதங்கள் தேவனுடைய ஏற்பாடாக கொடுக்கப்பட்டிருப்பதை உருவகமாக குறித்துக்காட்டப்படுகிறது. மேலும் சத்தியத்தின் அறிவும், பாவத்திலிருந்து நீதிமானாக்கப்படுதலும், பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதலுமாகிய தேவனுடைய வார்த்தையின் மகாமேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை தன் சொந்த உடைமையாக்கிக்கொள்ளும் சிலாக்கியமும் இதில் தரப்பட்டுள்ளன. இந்த விருந்து அனைத்தையும் கர்த்தர் தற்போது, 1800 வருடங்களாக கொடுத்துவருகிறார். அதில் பங்குபெறவே குறிப்பிட்ட சிலரை அழைத்து வருகிறார். முதலாவதாக, மதவெளிச்சத்தைப் பெற்றிருந்த மோசேயின் பிரதிநிதிகளாயிருக்கிற பரிசேயர்க்கும், இரண்டாவதாக, தரித்திரரும், பாவிகளும், பலவீனர்களும் , இஸ்ரயேலில் தீண்டத்தகாதவர்களுமாக இருந்த, கெட்டகுமாரன் வகுப்பாராகிய ஆயக்காரரும் அழைக்கப்பட்டனர்.

பிந்தைய வகுப்பார் அழைப்பை ஏற்று வந்தாலும், ஏற்கனவே ஏற்பாடுசெய்யப்பட்ட இடங்களை நிரப்ப போதுமானவர்களாக இல்லை. மற்றொரு வார்த்தையில் கூறினால், தெரிந்துகொள்ளப்பட்ட சபையின் முன்தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையைப் பூர்த்திசெய்ய, யூதர்களில் தேவனால் ஏற்றுக்கொள்ளத்தக்க "உத்தம கபடற்ற இஸ்ரயேலர்" போதுமானோர் இருக்கவில்லை. இதன் காரணமாக, மூன்றாம்முறை, எஜமான் தம் ஊழியக்காரர்களை அனுப்பி, ஒரு இருக்கைகூட காலியாக இல்லாதபடிக்கு பட்டணத்தின் "பெருவழிகளிலும், வேலிகளருகிலும் போய், என்வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா என்றான்..."(லூக் 14:23).

இது, புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அனுப்பப்படுவதைக் குறிக்கிறது. 18 நூற்றாண்டுகளுக்கும் மேலாக இந்த செய்தியானது, கேட்கும் செவியுடையோரையும் கீழ்ப்படிகிற இருதயமுடையோரையும் இழுக்கும்படிக்கு, இந்த அழைப்பானது பெருவழிகளிலும் தெருக்களிலும் சென்றுகொண்டிருக்கிறது. ஆகமொத்தம், அவர்கள் திரள்கூட்டத்தாரல்ல, அவர்களின் மொத்த எண்ணிக்கையில் பெரும்பான்மையானோர் உலகின் ஒளியாக இருக்கப்போவதில்லை. அப்போஸ்தலர் எழுதுகிறார்; "எப்படியெனில் சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை; பிரபுக்கள் அநேகரில்லை" "தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை, விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும்.." ராஜ்யத்தின் சுதந்தரவாளிகளாகவும் தெரிந்துகொண்டார் – 1கொரிந்தியர் 1:26,27; யாக் 2:5.

மாபெரும் வீட்டு எஜமானால் தீர்மானிக்கப்பட்டிருந்த முழு எண்ணிக்கை, கிறிஸ்துவின்மூலம் அழைக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, தகுதியுடையோராக காணப்பட்டு, இறுதியில் அந்த மேஜையில், மாபெரும் விருந்தில் பங்குபெற ஒரு இடம் பிடிக்கவேண்டும். அவரது மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினபிறகு, ஆட்டுக்குட்டியானவரின் திருமணத்தில் கனப்படுத்தப்படுவர், இது திருமணத்துக்குரிய விருந்து(வெளி19:7–9). அந் விருந்தில், மணவாட்டி வகுப்பாராகுவதற்கு தகுதியில்லாத இரண்டாம் தரமான கூட்டத்தார் இருப்பர். இவர்கள் மணப்பெண்ணின் தோழிகள் என்று உருவகமாக அழைக்கப்படும் திரள்கூட்டத்து வகுப்பாரேயாவர். மணவாட்டியை கூட்டிச்சேர்த்தபிறகு, பாபிலோனிலிருந்து இவர்களுக்கு கர்த்தருடைய செய்தி கொடுக்கப்படும்; அது; ஆட்டுக்குட்டியானவருடைய திருமண விருந்துக்கு அழைக்கப்பட்டோர் பாக்கியவான்கள்".

அந்த மாபெரும் விருந்தின் மேன்மைகளையும், சந்தோஷங்களையும் கற்பனை செய்துகொள்ளலாம். அந்த நற்காரியங்களின் நறுமணம் வந்துகொண்டிருக்கிறது. விருந்து அறைக்குள் நாம் நுழையுமுன்பாக, ஏற்கனவே திருமண விருந்தின் முந்தைய அறையை அந்நறுமணம் வந்தடைந்துவிட்டது. தேவனுடைய வசனமாகிய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் மூலமாக அந்நறுமணம் நம்மிடத்தில் வந்திருக்கிறது. "தேவன் தம்மிடத்தில் (மேலாக) அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை"(1கொரிந்2:9) என்று நமக்கு கர்த்தரது உண்மைத்தன்மையும், அவரது முன்னேற்பாடுகளும் உறுதியளிக்கின்றன.

முதலில் அழைக்கப்பட்டவர்கள் அந்த திருமண விருந்தை ருசிபார்க்காதபோதிலும், மற்றுமொரு விருந்தை அவர்களுக்கென தெய்வீகஏற்பாடு ஆயத்தம் பண்ணியிருக்கிறதற்காக தேவனுக்கு நன்றி. "கொழுமையான பதார்த்தங்களடங்கிய" இந்த விருந்து, தேவ இராஜ்யத்தில் எல்லா தேசங்களுக்கும், கோத்திரங்களுக்கும், பாஷைக்காரருக்கும், ஜனங்களுக்கும் பரிமாறப்படும் – ஏசாயா 25:6–8.

———————

**R 5417**

# "சீரான மனநிலையை அடைவதன் முக்கியத்துவம்"

## "THE IMPORTANCE OF ATTAINING BALANCE OF MIND'

"உங்கள் செயல்களெல்லாம் அன்போடே செய்யப்படக்கடவது" – 1கொரிந்தியர் 16:14.

தேவன் இரக்கம் மற்றும் அன்பின் சொரூபியாயிருக்கிறார். "தேவன் அன்பாகவே இருக்கிறார்" என்று வேத வாக்கியங்கள் அறிவிக்கின்றன. மேலும் தேவனுடைய பிள்ளைகளாயிருப்பவர்கள் அவருடைய சாயலில் வளருகிறவர்களாக அன்பின் பிள்ளைகளாயிருப்பர். அப்.யோவான் கூறுகிறபடி, "அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான், தேவனும் அவனில் நிலைத்திருக்கிறார்" – 1யோவா4:16. நாம் எந்தளவுக்கு புது சிருஷ்டிகளாக உறுதியான குணாதிசயங்களில் வளர்கிறோமோ, அந்தளவுக்கு அன்புசெய்கிற பண்பு வளருவதாயிருக்கிறது. கூடுதலாக, நம்முடைய நிதானிப்பும் மிகவும் துல்லியமானதாக இருப்பதையும் காணலாம். கர்த்தருடைய ஆவியில் வளர்ந்தவர்கள் முன்பிருந்ததைவிட மேலான நிதானிப்பை உடையவர்களாயிருக்கின்றனர். நாட்கள் செல்லச்செல்ல உலக ஜனங்கள்மேல் எவ்வாறு சிறந்தமுறையில் இரக்கமாயிருப்பது என அறிவர். மேலும் அவர்கள் உன்னதத்திலிருந்து வரும் ஞானத்தை அதிகதிகமாக பெறுவர்.

### இராஜ்யத்திற்காக கவனமாக தயாராகுதல் அவசியமானது

நாம் கிறிஸ்துவர்களாக ஆவதற்கு முன்பு, நாம் நம்முடைய குடும்பத்தாரிடம் அல்லது நண்பர்களிடம் எவ்வாறு முறையாகப் பழகுவது என்பதில்கூட குறைவான அல்லது அதிகமான சமச்சீரற்ற மனநிலையை உடையவர்களாயிருந்திருக்கலாம். அல்லது இரக்கம் மற்றும் அனுதாபத்தினால், அவர்களுக்கு பணம் தருவதோ அல்லது அவர்களுடைய நன்மதிப்பைப் பெறும் மனநிலையை உடையவர்களாகவோ இருந்தாலும் அது அவர்களை காயப்படுத்தும் விதமாக இருக்கும். அல்லது நாம் இன்னும் கடுமையான மற்றும் இறுக்கமான மனநிலையில் இருந்திருக்கலாம். ஆனால் தெளிந்த புத்தியின் ஆவியில் நாம் வளரும்போது, தெய்வீக சித்தத்திற்கும், தேவஆவிக்கும் இசைவான முறையில் சிறந்தமுறையில் பழக கற்றுக்கொள்வோம்.

நம்முடைய மாறுதலை அடைந்து, நம் மீட்பரைப்போல் சாயலடையும்பொழுது, நம் எல்லா வல்லமைகளும் பூரணமானதாயிருக்கும். நம்முடைய அன்பு, நீதியைக் குறித்தான நம்முடைய புரிதல், மற்றவர்களோடு எவ்வாறு பழகுவது என்பதில் நம்முடைய புரிதல் போன்ற அனைத்தும் அப்பொழுது பூரணமானதாயிருக்கும். இம்மாதிரியாக அன்பு, இரக்கம், நீதி போன்ற குணாதிசயங்களில் முன்னேறாத ஒவ்வொருவரும் இராஜ்யத்தின் வேலைக்காக தங்களை தயாார்ப்படுத்தவில்லை.

அடுத்த யுகமானது உலகத்தை சுத்திகரித்தல் மற்றும் தூய்மையாக்குதலுக்கான காலப்பகுதியாகும். அவசியமான சிட்சைகளை தற்காலத்தில் கொடுக்கமுடியாதபடி குணமுடைய தேவனுடைய பிள்ளைகள், அவர்கள் எந்த பதவியிலிருந்து அதை செய்யவேண்டுமோ அந்த பதவிக்கு தகுதியுடையவரல்ல. இன்னொருவகையில், கூடுதலான அல்லது அளவுக்கு அதிகமான சிட்சைகளை தருகிறவர்களும் மனுக்குலத்தை வழிநடத்த பொருத்தமானவர்களல்ல. எனவே வரவிருக்கின்ற யுகத்தின் வேலைகளுக்கு தயாராகும்பொருட்டு நமக்கு இந்த சமச்சீரான மனநிலை தேவைப்படுகிறது.

### கோபத்திற்கான முறையான மற்றும் முறையற்ற தருணங்கள்

ஆதாமின் முழு சந்ததியும் விழுந்துபோன நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை நாம் காணும்போது, அதாவது சிலர் அதிகளவிலும் சிலர் சிறிய அளவிலும் விழுந்துபோயிருக்கிறார்கள் என நாம் காணும்போது, மனுக்குலத்தின்மேல் நம்முடைய விசாலமான பரிவிரக்கமானது வளரவேண்டும். நாம் கருணை உள்ளத்தை வளர்க்கவேண்டும். அவர்களுடைய சீரழிவிலிருந்து அவர்களை தூக்கியெடுக்க விருப்பமுள்ளவர்–களாயிருக்கவேண்டும். எந்தளவு வாய்ப்பளிக்கப்படுகிறதோ அந்தளவுக்கு நாம் அவர்கட்கு உதவிடவேண்டும். இதன் காரணமாக நாம் தீமைக்குத் தீமை செய்வதிலிருந்து தூரமாக விலகியிருக்க விரும்புவோம். நம்மால் முடிந்தளவு சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க நாடுகிறோம். எனவே கடிந்துகொண்டு கண்டனம் பண்ணுவதிலிருந்து விலகியிருந்து அநீதி செய்யாதபடி பார்த்துக்கொள்ளும் அதேவேளையில், இரக்கமும் அன்புடையதுமாக நம்முடைய வார்த்தைகள் இருப்பதில் கவனமாகஇருக்கவேண்டும். இருந்தபோதிலும், நம்முடைய வார்த்தைகள் கோபமான வார்த்தைகளாக இல்லாவிடினும், சிலசமயங்களில் துல்லியமான, கண்டிப்பான வார்த்தைகள் உதவிகரமாயிருக்கும். ஆனாலும் அவ்வார்த்தைகள்

அன்பின் மனநிலையாகிய கர்த்தருடைய ஆவியின் மனநிலையாயிருக்கவேண்டும்.

**கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள்**

நீதியான கோபத்திற்கும், அன்பில்லாத, இரக்கமில்லாத, அநீதியான கோபத்திற்கும் வித்தியாசமுள்ளது. நாம் அறிந்தபடி தேவன் துன்மார்க்கர்மேல் கோபமுள்ளவராயிருக்கிறார் என வேத வாக்கியங்கள் கூறுகின்றன(சங் 7:11). எனவே கோபமானது பாவநிலையை மட்டும் அவசியம் குறிக்கவேண்டுமென்பதில்லை என்ற உண்மையை காண்பிக்கிறது. ஏனெனில் தேவனிடத்தில் பாவமென்பதில்லையே. மேலும் தம் சிருஷ்டிகளை எந்த சட்டதிட்டங்களின்படி நியாயந்தீர்க்கிறாரோ அவைகளின்படியே தம்மையும் நியாயந்தீர்த்துக் கொள்கிறவராயிருக்கிறார். எனவே கோபமானது தனக்குள்ளாக பாவமுடையதாயிருக்கவில்லை. தேவனுடைய விஷயத்தில் அவர் தவறிழைப்பார் என்கிற ஆபத்தே இல்லை. என்னவெனில் சரியானவற்றைக் குறித்து கோபம் கொள்வதோ அல்லது தப்பிதங்களை ஏற்றுக்கொள்ளுவதோ அல்லது தவறான காரியங்களுக்கு வளைந்து கொடுப்பதோ அல்லது சரியானவற்றை எதிர்ப்பதுபோன்ற தவறுகளை இழைக்கமாட்டார். அவருடைய ஞானம் பரிபூரணமானதால் அவருடைய நடவடிக்கைகளும் பரிபூரணமானவைகளே. ஆனால் நம்முடைய விஷயத்தில் கோபமானது நமக்கு முறையான ஒன்று என எண்ணுவோமானால், அதை நாம் மிகுந்த விவேகத்தோடு அல்லது முன்ஜாக்கிரதையோடு பயன்படுத்தவேண்டும். அப்.பவுல் கூறுகிறபடி, "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள" – எபே4:26.

ஒருவேளை ஒரு அப்பாவி சகோதரன் தவறினதினால் பாடுபட்டால், அத்தவறைப்பற்றி நாம் முழுமையாக தெரிந்திருக்கும் பட்சத்தில், அச்சமயத்தில் நீதியான கோபத்தை வெளிப்படுத்துவது நமது கடமையாயிருக்கிறது. ஒரு வாயில்லா ஜீவன் கொடுமைப்படுத்தப்படுவதை நாம் கண்டால், ஒரு குறிப்பிட்ட அளவு கோபத்தைவெளிப்படுத்துவது முறையானதாக இருக்கும். நீதியின் கொள்கைகளானது வெறுக்கப்படுவதை நாம் கண்டால் கொஞ்சம் கோபத்தை வெளிப்படுத்துவது அவசியமானதாக இருக்கலாம்.

ஆனாலும் இம்மாதிரியான காரியங்கள் மிகவும் அரிதான ஒன்றாக இருக்கவேண்டும். எவ்வாறெனில், சூழ்நிலைகள் பெரும்பாலும் நமது வேலைக்குட்ட காரியமல்ல. அப்.பேதுரு குறிப்பிடுவதுபோல, அந்நிய காரியங்களில் தலையிட்டு பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது – 1பேது 4:15.

ஒரு பெற்றோர் அவருடைய பிள்ளைக்கு நியாயமற்ற காரியத்தை செய்ய நாம் கண்டால், அக்குழந்தையின் ஜீவனுக்கு ஆபத்தில்லாதவரை நாம் தலையிடக்கூடாது. அது வெறுமனே கிள்ளுவதோ அல்லது காதை திருகுவதாக இருந்தால், நாம் அதில் தலையிடக்கூடாது. அது நம்முடைய வேலையும் அல்ல. கர்த்தருடைய பிள்ளைகளாக, பரலோக இராஜாவின் ஸ்தானாதிபதிகளாக, தெளிந்தபுத்தியின் ஆவியையும், அன்பின் ஆவியையும், நியாயத்தன்மையையும் அதிகமதிகமாகத் தேடுவோமாக!

---

**R 5418**

## "பரிசுத்த ஸ்தலத்திலுள்ள ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள்"

## THE SPIRIT BEGOTTEN IN THE HOLY

பொதுவாக மிக நேர்த்தியான பணிவிடைக்காரர்களாக நம்முடைய காதுகளும் நாவும் இருந்து, நமக்கு அநேக ஆசீர்வாதங்களைக் கொண்டுவருகின்றன. இருந்தபோதிலும், சிலசமயம் அவை தவறாக வழிநடத்தப்படாதபடிக்கு நிர்வகிப்பது கடினமாயிருக்கிறது. எல்லா இடங்களிலும் உள்ள பிரச்சனைகளில் சரிபாதியளவு, தவறாக புரிந்துகொள்ளப்பட்டதன் விளைவாகவே இருப்பதாக வெளிப்படையாகத் தோற்றமளிக்கிறது. தேவன் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளார், வேதம் மற்றும் பிரசங்கம் தவறாக புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், வேதாகம விளக்கவுரைகள், ஆசரிப்புக்கூடார நிழல்கள் மற்றும் காவற்கோபுரம் இவைகளும் தவறாக புரிந்துகொள்ளப்படுவதில் ஆச்சரியம் இருக்கமுடியாது. பொருட்கூறுகளை புதிதாக்கி மீட்டெடுக்கவே இவைகளை நாம் செய்யமுடியும் என்பதில் நம்முடைய நாவோ அல்லது பேனாவோ நமக்கு சிறப்பான முறையில் சேவை செய்யும் என்றும், நம்முடைய வாசகர்களின் கண்களும் காதுகளும் அவர்களுக்கு சிறப்பாக சேவை செய்யும் என்றும் நாம் நம்புகிறோம்.

**ஜெநிப்பித்தலே மறுரூபமாக்கும் வல்லமை**

ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் விஷயத்தில், பரிசுத்தஆவியின் ஜெநிப்பிக்குதல், மனித

சுபாவத்திலிருந்து புதிய சுபாவத்திற்கு அவர்கள் கடந்துசெல்வதற்கான மறுரூபமாக்கும் வல்லமையாக இருக்கிறது என்பதை மீண்டும் மீண்டும் காண்பிப்பதற்கு பெருமுயற்சி செய்கிறோம். இந்த மாற்றம் ஆசரிப்புக்கூடார நிழலில், ஆசாரியர் பிரகாரத்திலிருந்து பரிசுத்தஸ்தலத்துக்கு கடந்துபோவதன்மூலம் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது. இந்த தற்காலத்தில், பிரகாரமானது தேவனை அணுகுகிறவர்களின் பூமிக்குரிய நிலைமையை குறிக்கிறது. ஆனால் அவர்களுடைய ஜீவியங்கள் தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்குமென ஒரு முழு அர்ப்பணிப்பை இன்னும் ஏற்படுத்தவில்லை.

எப்போது அர்ப்பணிப்பின் படி எடுக்கப்படுகிறதோ அப்போது இயேசு நம்முடைய பிரதான ஆசாரியராக செயல்பட்டு, நம்முடைய மாம்சத்தின் குறைபாடுகளை மூடுவதற்காக தம்முடைய புண்ணியத்தை அருளி, உடனடியாக நம்மை பிதாவின்முன்பாக நிறுத்துகிறார். பூமிக்குரிய சுபாவத்தின் நம்முடைய அர்ப்பணிப்பு இவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டு, தெய்வீக மதிப்பீட்டின்படி நாம் அந்த தருணத்திலிருந்து மாம்சத்துக்கு மரித்து, ஆவியில் பிழைத்திருக்கிறோம் – அதாவது, அழிவுக்குரிய வித்தினால் அல்ல, மாறாக தேவனுடைய ஆவியினால் மறுபடியும் ஜெநிப்பிக்கப்படுகிறோம்.

இவ்வாறு ஜெநிப்பிக்கப்பட்ட அனைவரும் தேவனுடனான தங்களின் உறவில் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறார்கள் – அதாவது, தேவனுடைய பிள்ளைகளாக, தேவனுடைய சுதந்தரவாளிகளாக இருக்கிறார்கள். அதன்பிறகு அவர்கள் 7 விளக்குத்தண்டுகளுடன் நிற்கிற பொன் குத்துவிளக்கினால் குறியிட்டுக் காட்டப்படுகிற சத்தியத்தினால் ஒளியூட்டப்படுதலைப் பெற்றிருக்கிறார்கள்; சமூகத்தப்ப மேஜை ஆவிக்குரிய ஆகாரமாக குறித்துக் காட்டப்படுகிறது. நறுமண தூபபீடமானது, தொழுதுகொள்ளுதல் மற்றும் ஜெபிப்பதற்கான சிலாக்கியங்களாக குறித்துக் காட்டப்படுகிறது.

இந்த யுகமுடிவுவரை, இந்நிலைமை தொடர்ந்து நடைபெற்று, ராஜரீக ஆசாரியக் கூட்டத்தாரும், மிகவும் உண்மையுள்ளவர்களாகிய சிறுமந்தை வகுப்பாருக்கும் சற்று குறைவான உண்மைத்தன்மையை காட்டும் திரள்கூட்டத்து வகுப்பாருக்குமிடையே நியாயத்தீர்ப்பு அல்லது பரீட்சை அல்லது தனித்தன்மை ஏற்படுத்தப்படும். இதற்குப்பிறகு, திரள்கூட்டத்து வகுப்பார் நிழலான லேவி கோத்திரத்தாருக்கு நிஜமாக இருப்பர்.

மேசியாவின் இராஜ்ஜியம் ஸ்தாபிக்கப்பட்டபிறகு, புதிய ஒழுங்குமுறையின்கீழ், கிறிஸ்துவின் உடன் சுதந்திரர்களாகிய தகுதியடைந்த சபைக்கும், நிஜமான லேவியர்களாகிய திரள்கூட்டத்தாருக்குமான தனித்தன்மை நிரந்தரமாக இருக்கும். இந்த இரு வகுப்பாரின் ஊழியங்களும் வேறுபட்டிருக்கும். முந்தைய வகுப்பார் சிங்கசனத்தின்மீது அமர்ந்துள்ள ஆசாரியராகிய மெல்கிசேதேக்குடன் பொருந்துகிற ஆசாரியத்துவமாயிருப்பர். பிந்தைய வகுப்பாரின் பணி, லேவியர்களால் நிறைவேற்றப்பட்ட பணிகளோடு பொருந்துகிறதாயிருக்கும். அவை, ஆசாரியர்களின் பணிவிடைக்காரர்களாக இருந்து, ஜனங்களுக்கு போதித்தல் போன்றவைகளை குறிக்கிறது. அவர்கள் தங்களுக்கான வழிகாட்டுதல்களை ஆசாரியர்களிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள்.

—————

**R 5418**

## "நம் கரத்தில் உள்ளவைகளை தேவன் பயன்படுத்துதல்"

## "GOD'S USE OF THINGS IN OUR HAND"

**"மேலும் கர்த்தர் மோசேயை நோக்கி, உன் கையில் இருப்பது என்ன?" – யாத்திராகமம் 4:2.**

தேவன் தம்முடைய ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும் மாபெரும் மற்றும் கனமான ஊழியத்திற்காக மோசேயை அழைத்தார். இப்போது அவருக்கு எண்பது வயதாகிறது. எகிப்தின் அரசவையில் அவருடைய நீண்ட அனுபவம் அரசாங்கத்தினுடைய அலுவல்களைப் பற்றி தெரிந்துகொள்ளச் செய்தது. அப்போஸ்தலர் 7:22ல் ஸ்தேவான்; "மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்" என்று நமக்குக் கூறுகிறார். அவர் எகிப்திய இராணுவசேனையின் ஒரு திறமிக்க தளபதியாகவும் இருந்தார் என பாரம்பரியம் கூறுகிறது.

எனினும், இழிவாக கருதப்பட்ட தேவனுடைய ஜனங்களுக்காக, உலக ஆதாயங்கள் அனைத்தையும் துறந்தார்(எபி11:24–26). "மோசே .. பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள

பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான். தேர்ந்தெடுக்கப்பட்ட தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற இஸ்ரயேல் ஜனங்களோடேகூட துன்பங்களை அனுபவிக்கவே விரும்பினார், மேலும் இஸ்ரயேலருடைய பிதாக்களுக்கு பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களில் பங்கடைய விரும்பினார்.

இஸ்ரயேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்கவேண்டி தேவனால் அழைக்கப்பட்ட தலைவர் கற்றறிந்த ஒருவராயிருக்கவேண்டும் என்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது. மேலும் அம்மாதிரியான சூழ்நிலைகளில் இருந்த அந்த ஜனங்களுடைய தலைவராயிருப்பவர் எல்லா வகையிலும் தகுதி பெற்றவராயிருக்கவேண்டும் என்பதும் பொருத்தமானதாயிருக்கிறது. தன்னுடைய மாமனாகிய எத்திரோவின் மந்தையை மேய்ப்பதற்காக 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்ததன் மூலம், ஒவ்வொரு பாதை ஒவ்வொரு மலை, ஒவ்வொரு ஊற்று பற்றி முற்றிலும் தெரிந்துகொண்டவராயிருக்க முடிந்தது என்பதில் எவ்வித ஐயப்பாடும் நமக்கு இல்லை. தேவனுடைய வழிநடத்துதலின்படி கானானுக்கு இந்த வனாந்தரவழியாய் ஜனங்களை கூட்டிசெல்வதற்காக இஸ்ரயேலின் தலைவரானபின்பு, இந்த அனுபவம் பெரிதும் அவருக்கு உதவிகரமாயிருந்தது.

**அனுபவமே சாந்தகுணத்தை போதிக்கிறது** (Meekness taught by experience)

ஆனால் மீதியான் தேசத்தில் நாற்பது வருடகால அனுபவம் சாந்தகுணம் என்ற முக்கியமான பாடத்தை மோசேக்கு கற்றுத்தந்தது. அவர் தனிமையாக இருந்த அந்த நீண்டகாலப்பகுதி அவரை கூச்ச சுபாவமுள்ளவராக்கிற்று. எகிப்தின் ராஜ அரண்மனையுடனான அவருடைய தொடர்பை துண்டித்தவுடன், அவருடைய ஜனங்களை உடனடியாக விடுதலைசெய்ய முயற்சி மேற்கொண்டார். ஆனால் அவர்களோ அவருடைய சேவைகளை விரும்பவில்லை. மாறாக அவருடைய தலையிடுதலால் சீற்றங்கொண்டனர். ஆகவே தேவன் இப்போது இஸ்ரயேல் ஜனங்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி கானான் தேசத்துக்கு அழைத்துச்செல்லும் மாபெரும் வேலைக்காக அனுப்பும்போது, தன்னுடைய திறமையின்மீது தன்னம்பிக்கையற்றவரானதோடு, பயமும் தயக்கமும் உள்ளவராக இருந்தார்.

கர்த்தராகிய ஆண்டவர் எரிகிற முட்செடியிலிருந்து மோசேக்கு தோன்றி, அவர் செய்யவேண்டிய வேலையை அவருக்குத் தந்ததுமன்றி, தேவனாகிய யேகோவா, தாம் நிச்சயமாக அவரோடு இருப்பேன் என உறுதியளித்தார். ஆனபோதிலும், மேற்கொள்ளவேண்டிய அப்பணியின் பரிமாணத்தை மோசே முறையாக உணர்ந்ததுடன், தான் அதற்கு போதுமானவராக இல்லை என்பதையும் உணர்ந்தார். மேலும் தான் அப்பணியை மேற்கொள்ள சக்திவாய்ந்தவராக இல்லை எனவும், எகிப்தின் அரசருடைய இருதயத்தை ஆட்கொள்வதற்கு தன்னைவிட வலிமையுள்ள வேறு யாராவது ஒருவர் அவ்வேலைக்கு தேவை எனவும் வலியுறுத்தினார். இஸ்ரயேல் ஜனங்களை அவர்களுடைய அடிமை வேலையிலிருந்து போகச்சொல்வது எகிப்தியருடைய நோக்கத்திற்கும் கொள்கைக்கும் முற்றிலும் எதிரானது என அவர் அறிந்திருந்தார். அவர் கர்த்தரிடத்தில் கூறும்போது,“பார்வோனிடத்திற்கு செல்வதற்கும், இஸ்ரயேலின் பிள்ளைகளை எகிப்திலிருந்து கூட்டிவருவதற்கும் நான் எம்மாத்திரம் ?” என்றார். ஆனால் அவரே அதற்கு பொறுப்பானவராகவும், அவ்விஷயத்தில் தாமே வழிநடத்துபவர் எனவும் தேவன் உறுதியளித்தார்.

**“உன் கையில் இருப்பது என்ன ?**”(What is that in thine hand)

தேவனுடைய அங்கீகரிப்பு மற்றும் வல்லமைக்கான சில செயல்விளக்கத்தினை மோசே மேலும் விரும்பினார். மேலும் தேவனே தம்மை அனுப்பியிருக்கிறார் என எவ்வாறு இஸ்ரயேல் ஜனங்களுக்கு அறியச்செய்வது என வினவினார். ஏனெனில் அவர்கள் தம்மை நம்ப மாட்டார்கள் என கூறினார். பின்பு தேவன்,“உன் கையில் இருப்பது என்ன ?” என கேட்கும்போது, “ஒரு கோல்” என மோசே பதிலுரைத்தார். மேலும் தேவன் அவரை நோக்கி, “உன் கோலை தரையில் போடு” என்றார். மோசே அதை தரையில் போட்டபோது அது சர்ப்பமாயிற்று. அதைக்கண்டு மோசே அதைவிட்டு விலகிப்போனார். தன்னுடைய கையில் இருப்பது என்ன என்பதை குறிப்பாக கவனிக்கத் தவறியிருப்பாரானால், இதற்கு முன்பு அது சர்ப்பமாக இருந்திருக்கும் என நினைத்திருப்பார். ஆனால் அவர் அதை உற்று நோக்கியபோது, தாம் கீழே போட்ட கோலே சர்ப்பமாக மாறியது என்று உறுதியாய் அறிந்திருந்தார். பின்பு தேவன் சர்ப்பத்தின் வாலைப்பிடித்து எடுக்கச்சொன்னபோது, மோசே அவ்வாறுசெய்ய, அது மீண்டும் கோலானது.

**நமக்கான பாடம்** (The Lesson for us)

இதன் மூலம் நாம் எடுக்கவேண்டிய பாடம் என்னவெனில்,கர்த்தர் நம்மை ஏதாவதொரு ஊழியத்திற்கு அனுப்புவாரானால், நாம் உலகத்தை வென்றுவிடலாம் என்கிற எண்ணம் உடையவர்களாயிராமல், நம்முடைய குறைவை உணர்ந்தவர்களாகவும், மேலும் அவ்வேலைக்கு நாம்

முற்றிலும் போதுமானவர்களல்ல என்கிற முறையான எண்ணம் உடையவர்களாக இருக்கவேண்டும். தேவனுடைய உதவும் கிருபையின்றி நம்மால் எதையும் நிறைவேற்றமுடியாது எனவும் உணர்ந்தவர்களாயிருக்கவேண்டும். அவரே நம்மை அனுப்பினார் என்பதில் உறுதியாக நாம் இருப்பதோடு, நம் ஊழியமானது நம்முடைய சொந்த முட்டாள்தனமான எண்ணத்தினாலானது அல்ல என்பதிலும் உறுதியாயிருக்கவேண்டும். இந்த முழு ஏற்பாட்டிற்கும் கர்த்தரே பின்னிருந்து இயக்குகிறார் எனவும் உறுதியாயிருக்கவேண்டும். அப்பொழுது நாம் அவரில் முழு நம்பிக்கை வைத்திருப்போம். "என்னால் எந்தவொரு காரியமும் செய்யமுடியாது" என்று மோசே கூறினதுபோன்ற உணர்வையே நாமும் அடையவேண்டும். ஆனால் தேவ ஊழியம் செய்ய நாம் விரும்பினால், ஒரு தாலந்தோ அல்லது மற்றொரு தாலந்தோ என்ன உள்ளது என நம்முடைய கரங்களில் உள்ளதை நாம் கவனிக்கவேண்டும். தேவன் தம்முடைய மகிமைக்காக நம்முடைய மிகவும் எளிமையான தாலந்தையும் பயன்படுத்துவதில் மிக்க ஞானமுள்ளவராயிருக்கிறார். தற்சமயம் நம் கரங்களில் உள்ளதை நாம் பயன்படுத்தவேண்டும் என தேவன் விரும்புகிறார். ஒருவேளை நாமேகூட அவற்றை கவனிக்க தவறியிருக்கலாம். நம் வாழ்க்கையானது எளிமையானதாககூட இருக்கலாம், அது ஒரு காரியமல்ல. தேவனால் நம்மை பயன்படுத்தமுடியும். அதைப் பயன்படுத்தும்போது கிடைக்கும் அனுபவங்கள்மூலம் தேவையான பாடங்களையும் தருகிறார்.

தேவன் மோசேயோடு வைத்த தொடர்புகளில் நமக்கான மற்றுமொரு பாடமென்னவெனில், நம் கரங்களில் உள்ள, நமக்கு மிகவும் நெருக்கமானவைகளை, தேவன் தம்முடைய வல்லமையினால் சகலத்தையும் நம்முடைய நன்மைக்கேதுவாக்கவில்லையெனில், அவை நம்மை காயப்படுத்தும். நாம் ஊழியம்செய்யும் ஆவியைப் பெற்றிருப்போமானால், தேவன் நமக்கு தூரமானவைகளையல்ல, நம் கரங்களில் உள்ளதையே பயன்படுத்துவார்.தம்மில் அன்புகூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக ஆக்கும்படியாக, தீமையின்மீதும் தெய்வீக வல்லமை இருக்கிறது. அதிகதிகமான பாடங்களை இவைகளின்மூலம் நாம் கற்றறிகிறோம். ஆக, நாம் ஊழியஞ் செய்வோமானால் நம்மிடம் உள்ளவைகளை நாம் கவனித்து, எவற்றை பயன்படுத்தலாம் என உற்று நோக்கவேண்டும்.

**கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் மிகுதியிலும் உண்மையுள்ளவன்** (Faithful in least - Faithful in much)

பெரும்பான்மையான மேன்மக்கள் ஆயிரக்கணக்கான பாஷைகளில் கர்த்தருக்கு ஊழியம் செய்ய விரும்புகின்றனர். ஒருவேளை ஆயிரம் மொழிகள் தெரிந்திருந்தால், அவை எல்லாவற்றையும் பயன்படுத்தி பாடமுடியும் என உறுதியாயிருப்பர். நாம் பெற்றிருக்கிற ஒன்றை உண்மையாக பயன்படுத்தாவிட்டால், ஆயிரம் பாஷைகளை நாம் பயன்படுத்த எவ்வாறு அறிவோம்? "கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருப்பான்".

அநேக ஜனங்கள் ஆயிரக்கணக்கானோர் முன்னிலையில் பேசவே விரும்புவர். ஆனால் ஆயிரக்கணக்கானோர் மத்தியில் பேசமுடியவில்லையெனினும், ஒருவரிடம் பேசுவது அதைவிட அவசியமானது. பத்து இலட்சம் டாலர்கள் என்னிடத்தில் இருந்தால் அதை கர்த்தருக்கு தந்துவிடுவேன் என சிலர் கூறுவர். ஆனால் ஏற்கனவே தங்களிடத்தில் உள்ள சிறுதொகையை தருவதற்குக்கூட மனமில்லாதவர்களுக்கு, கர்த்தர் அதிக தொகையை தரும்அளவுக்கு வாய்ப்பளிக்க மாட்டார். "உள்ளவனெவனோ (தாலந்துகளைப் பயன்படுத்துவதன்மூலம்) அவனுக்கு கொடுக்கப்படும்.... இல்லாதவனிடத்திலிருந்து( தன் தாலந்தை புறக்கணிப்பவன்) உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்" – மத்தேயு 25:29.

ஆகவே, நம்முடைய கரங்களில் உள்ளதை நாம் பயன்படுத்தவேண்டும் என்பது மோசேயின் அனுபவங்கள்மூலம் நாம் கற்கும் பாடமாகத் தோன்றுகிறது. இதே பாடம் வேறொரு வகையில் போதிக்கப்படலாம். தீர்க்கதரிசி எலிசாவிடம், ஏழைவிதவை உதவிகேட்ட சம்பவமே அது. அவள் வறுமையில் இருந்ததுடன், கடன் கொடுத்தவர்கள் அவளுடைய கடனுக்காக இரண்டு குமாரரையும் அடிமைகளாக்கிக்கொள்ள வந்தனர். "வீட்டில் உன்னிடத்தில் என்ன இருக்கிறது சொல்" என எலிசா கேட்டார். "ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் ஒன்றும் இல்லை" என்றாள். பின் அந்த தீர்க்கதரிசி அவளிடம், அயல்வீட்டார் எல்லாரிடத்திலும் அநேகம் காலிப் பாத்திரங்களைக் கேட்டு வாங்கிவரும்படி கூறினார், கொஞ்ச பாத்திரங்களல்ல. பின் அந்த பாத்திரங்களெல்லாவற்றிலும் எண்ணெய் நிரம்பி வழிந்தது. அந்த ஸ்திரீ அவ்வாறு செய்தபின்பு, அதை விற்று தன் கடனை அடைத்துக்கொள்ளச் சொன்னார். அவளிடத்திலிருந்ததை வைத்து கர்த்தர் பயன்படுத்தினார்.

இதே வகையில் ஆயிரமானவர்களை போஷித்த கர்த்தருடைய அற்புதத்தில், "உங்களிடத்தில் என்ன இருக்கிறது?" என்று கேட்டார். பட்டணத்துக்கு

எவ்வளவுதொலைவு செல்லவேண்டும்? என்று கேட்கவில்லை. மேலும் பாரத்தை சுமக்கும் வண்டிகளில் பட்டணத்துக்குச்சென்று அப்பமும் இறைச்சியும் வாங்கி வர அப்போஸ்தலரிடம் கூறவுமில்லை. பதிலாக, உங்களிடத்திலுள்ளதை பயன்படுத்துங்கள் என்றார். அந்த ஐந்து அப்பங்களையும் இரண்டு சிறு மீன்களையும் ஆசீர்வதித்து, ஐயாயிரும்பேருக்கு அபரிதமாக போஷித்தார். அவர்களுக்கு வேண்டியமட்டும் உண்ணக்கொடுத்து திருப்தியடைந்தபின்பு, மீதியானவற்றை சீஷர்கள் பன்னிரெண்டு கூடைகளில் நிரப்பினர்(யோவா 6:5–13). ஆகவே நம்முடைய எல்லா தாலந்துகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்தவேண்டும். நம்மிடம் உள்ளதை நாம் பயன்படுத்தி, அதன்மூலம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளும்படியாக கர்த்தர் நோக்குகிறார். நம் சிலாக்கியங்களை செயல்படுத்துவதில் அதிக உண்மையுள்ளவர்களாக இருக்கும் பட்சத்தில், அவரிடமிருந்து பெறும்ஆசீர்வாதங்கள் பெரியவைகளாக இருக்கும்.

**மோசேயின் அனுபவங்கள் மாதிரி எடுத்துக்காட்டு**(Moses experiences typical)

நாம் மேற்குறிப்பிட்டுள்ள பாடங்களுடன், மோசேயின் அனுபவங்களிலும் இஸ்ரயேலருடைய விடுதலையிலும் இன்னும் கூடுதலான முக்கியத்துவம் இருக்கிறது என நாம் நம்புகிறோம். இவைகளில் சிலவற்றை நம் நாளின் நிலைமைகளுக்கு பிரதிநிதித்துவப்படுத்தி நாம் காணவேண்டும். தெய்வீக அறிவுரையின்படியே மோசே செயல்பட்டார். இஸ்ரயேலருக்கான மோசேயின் நிழலான இந்த ஊழியத்தோடு சம்பந்தப்பட்ட அநேகக் காரியங்கள், தீமையின் வல்லமையிலிருந்து தேவனுடைய ஜனங்கள் விடுதலையடைவதோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. பார்வோன் சாத்தானுக்கு அடையாளமாயிருக்கிறார். சாத்தானுடைய வல்லமையிலிருந்து அனைவரையும் விடுதலையாக்கும் தேவனுடைய நோக்கமுடைய, மோசேயின் அந்த நாட்களுக்கு ஒத்த நாட்களில் நாம் வாழ்கிறோம். இயேசுவும் சபையும் யேகோவா தேவனின் பிரதிநிதிகளாக, மோசேயின் ஊழியமாகிய விடுதலையின் ஊழியத்தைச் செய்வர். விடுதலையாக்கும் இப்பணி, தேவனிடத்திலிருந்து செயல்படுத்தும் அதிகாரம்பெற்ற மேசியாவுக்குரியது.

கோல் – அதிகாரத்தைப் பிரதிபலிக்கிறது. லேவி கோத்திரத்தின் தலையாக ஆரோன் இருக்கவேண்டும் என கர்த்தர் அறிவுறுத்துவது இதை தெளிவாக விளக்குகிறது. இஸ்ரயேல் ஜனங்களுக்குள் முறுமுறுப்புகள் இருந்தபோது, பன்னிரெண்டு கோத்திரங்களின் பிரதானிகளிடம் அவரவருடைய கோல்களை எடுத்து, அவைகளின்மேல் அவரவருடைய பெயர்களை எழுதி, அதை ஆசரிப்புக் கூடாரத்திற்கு அனுப்பும்படி மோசேயின் மூலமாக தேவன் அறிவுறுத்தினார் – எண்17:1–9. மற்றவர்களுடைய கோல்களுடன் ஆரோனுடைய கோலும் ஆசரிப்புக்கூடாரத்தினுள் போக வேண்டியதாயிருந்தது. ஏனெனில் அக்கோல் அவருடைய பிதாக்களுடையதாயிருந்தது. மேலும் காலையில் அந்தக் கோல்களை அவர்கள் பார்த்தபோது, ஆரோனுடைய கோல் துளிர்த்து, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைத் தரக்கூடியதாயிருந்தது.

இதன்மூலம் கோலானது, பொதுவாக அதிகாரத்தைக் குறிக்கிறதை நாம் புரிந்துகொள்ளமுடிகிறது. அவ்வகையில் அக்கோலானது தெய்வீக வல்லமை மற்றும் ஆளுகையை குறிக்கும் விசேஷமான வெளிப்படுத்தலாயிருக்கிறதாக தோன்றுகிறது. மோசேயின் அனுபவங்கள் நிஜமானவைகளின் நிறைவேறுதலாயிருக்கிறது என நாம் அதிக முற்போக்காக பேசமுடியாது. ஆனால் ஒரு வகையிலோ அல்லது வேறு வகையிலோ தேவனுடைய வல்லமையானது தீமையாகத் தோன்றுகிறது என நாம் நினைக்கலாம். ஏனெனில் சர்ப்பம் தீமையைக் குறிக்கிறது. தீமையானது கடந்த 6000 வருடகாலமாக வெற்றிபெற்றதுபோல் தோன்றுகிறது. பார்வோனுடைய சமூகத்திற்கு மோசேயும் ஆரோனும் சென்றபோது, மோசேயின்கோல் அங்கேயும் சர்ப்பமானது. மந்திரவாதிகளும் தங்களுடைய கோல்களை போட்டபோது அவைகளும் சர்ப்பமாயின. ஆனாலும் மோசேயின் கோலானது மந்திரவாதிகளின் கோல்கள் அனைத்தையும் விழுங்கிப்போட்டது.

**அதிகாரத்தின் கோலை மீண்டும் எடுத்தல்** (Resuming the rod of power)

எவற்றை இக்காரியங்கள் அடையாளப்படுத்துகிறது என நாம் அறிந்துகொள்ள மிகவும் ஆவலாயிருக்கிறோம், அதாவது, தேவன் எவ்வாறு இவ்வுலகை சாத்தானின் ஆளுகையின் கீழாக, கொஞ்சகாலம் வெற்றியடைய அனுமதித்திருக்கிறார் என அறிய விரும்புகிறோம். ஒரு மகா உபத்திரவக்காலத்தை அனுமதிக்கவேண்டியிருக்கிறது. இதுவும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு தெய்வீக அதிகாரத்தையும் ஆளுகையையும் கீழே போடவேண்டியிருக்கிறது.

இந்நிலைமையே தற்காலத்தில் உள்ளது என நாம் நினைக்கிறோம். ஜனங்கள் தேவன்மேல் உள்ள நம்பிக்கையை இழக்கின்றனர். தேவனே இல்லாததுபோல் இக்காலத்தில் நினைக்கின்றனர். உயர் தர்க்க சாஸ்திரங்களும்(Higher criticism) பரிணாமக் கொள்கையும்

சேர்ந்து, தேவன் ஒருவர் இல்லை எனவும் இயற்கையே கடவுளாக(Nature-god) உள்ளது என்ற எண்ணத்தை மனுக்குலத்திற்கு தருகிறது. இவ்வாறு இரக்கமற்ற, தனி நபரில்லாத இயற்கை கடவுளே உண்டு என்ற கருத்தை மனுக்குலம் பெறும்போது, நீதியும் அன்பும் நிறைந்த ஜீவனுள்ள தேவனைப்பற்றிய எண்ணங்கள் அனைத்தையும் அழித்துவிடுகிறது. ''தேவனுக்குப் பயப்படுகிற பயம் அவர்கள் கண்களில் இல்லை'' என வேதவாக்கியங்கள் கூறுகின்றன. ஆகவே நாம் ஒரு மகா உபத்திரவக் காலத்தை எதிர்நோக்கலாம், அதுசமயம், தேவனுடைய வல்லமையானது தீமையின் அதிகாரமாக வெளிப்படுவதுபோல் மேலும் தோன்றும். சிறிதுகாலத்துக்குப்பின்பு, அதிகாரத்தின் கோலை மீண்டும் எடுப்பது, தெய்வீக அதிகாரம் தொடர்வதாக இருக்கும்.

-------------

**R 5422**

# ''நம் புத்தியுள்ள ஆராதனை''

# "OUR REASONABLE SERVICE"

''அப்படியிருக்க சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை'' –ரோமர் 12:1.

அப்போஸ்தலர் பவுலினுடைய இந்த புத்திமதியானது, இதே நிருபத்தில் இதற்கு முன்பு உள்ள பதினோராம் அதிகாரத்தின் அடிப்படையிலேயே உள்ளது. இவ்வதிகாரத்திற்கு தொடர்புடைய வார்த்தைகள், முந்தைய அதிகாரத்திலும் நினைப்பூட்டப்பட்டிருக்கிறது. மாம்சீக இஸ்ரயேலருக்கும் ஆவிக்குரிய இஸ்ரயேலருக்குமான தேவனுடைய இரக்கங்களைக்குறித்து பதினோராம் அதிகாரம் பேசுகிறது. உலகத்தாருக்கு இதுபற்றி அதிகம் பேசப்படவில்லை. ஆனால் 10ம் அதிகாரத்திலோ தேவன் தமது சர்வசிருஷ்டிக்குமான அவருடைய இரக்கங்களைக்குறித்து விரிவாக பேசப்பட்டிருக்கிறது. இந்த நிருபத்தில் புறஜாதி ஜனங்களாயிருந்தவர்களுக்கு அப்போஸ்தலர் முகவரியிட்டு பேசுகிறார். தேவனுடைய இந்த இரக்கங்களைக்குறித்து பார்க்கும்போது( அவருடைய இரட்சிப்பின் திட்டம், மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் மாம்சீக இஸ்ரயேலரால் இழக்கப்பட்ட இடங்களைப்பெற, புறஜாதிகளில் சிலருக்கு அழைப்பு) அப்.பவுல் தன்னிடத்தில் கேட்கிறவர்களுக்கு, தங்களது சரீரங்களை பரிசுத்தமான மற்றும் பிரியமான ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று புத்திமதி கூறுகிறார்.

யாருக்கு அப்போஸ்தலர் இதைக்குறித்து பேசுகிறார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது. இந்த வார்த்தைகளை அவர் விசுவாசிகளுக்கே புத்திமதியாகப் பேசுகிறாரேயன்றி, உலகத்தாருக்கு அல்ல என்று தெளிவாகிறது. ஏற்கனவே அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்காக இந்த நிருபத்தினுடைய முன்னுரையானது எழுதப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் ரோமாபுரி சபையில் தொடர்புடைய சிலர், அர்ப்பண உடன்படிக்கை செய்திருக்கவில்லை என்று தெரிகிறது. சிலர் விசுவாசிகளாயிருந்து தேவனை அறிகிற அறிவிலும், சுயதியாகத்திற்கான செல்லும் செலவை கணக்குப் பார்த்திருந்தாலும், தங்களை முழுமையாக கர்த்தருக்கு ஒப்படைக்கவில்லை. மேலும் சத்தியத்தில் முழுமையாக இல்லாத, இன்னும் சகோதரர்களாக ஆகாதவர்களாயிருந்தனர். ஆக, தங்களுடைய சரீரங்களை ஜீவபலிகளாக ஒப்புக்கொடுத்தவர்களும், அவ்வாறு செய்ய நினைப்பவர்களுமான இரு வகுப்பாருக்குமே அப்போஸ்தலரின் வார்த்தைகள் சரிசமமாக பொருந்துகிறது. முற்றிலும் முறையாக கூறவேண்டுமெனில், சகோதரரே, நீங்கள் ஏற்கனவே கர்த்தருக்கென்று உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்கள், உங்களுடைய அந்த உடன்படிக்கையின் ஒப்புக்கொடுத்தலை முற்றிலும் நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். ஏனெனில் உங்களுடைய சரீரங்கள் பரிசுத்தமும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாயுமிருக்கிறது.

பரமபிதாவானவர் ஒருபோதும் யாரையும் நிர்ப்பந்திக்கவில்லை. ஆனால் அவர்களுடைய ஜீவபலிகளை ஏற்றுக்கொள்ள தாம் முன்வருவதாகவும், அதற்கு இப்போதே இரட்சண்ய நாள் எனவும் கூறுகிறார். அவரோடுகூட ஐக்கியப்பட வேண்டுமெனில், தன்னைத்தான் வெறுத்தலும், தியாகபலியுமே நிபந்தனைகளாக ஏற்படுத்தியிருக்கிறார். ஆனால் உடன்படிக்கை அல்லது அர்ப்பணிக்கவேண்டுமென்று யாரொருவரையும் எங்கும் எப்போதும் அவர் வற்புறுத்துவதில்லை. அவ்வாறுசெய்தால், பலியின் விஷயத்திலிருந்து கடமைக்கு செய்வதாக மாறிவிடும். தியாகபலி என்பதன் கருத்தானது தேவைப்படும் பொருளுக்கு எதிர்மாறானது.

### சீஷத்துவத்தின் நிபந்தனைகள்

தேவனுடைய ராஜரீக குடும்பத்தில் பிரதானமானவர்களாகிய நம்முடைய கர்த்தரும் அப்போஸ்தலர்களுமே நாம் எதைச் செய்யவேண்டும்

என்பதற்கான சிறந்த மாதிரிகைகளாக இருக்கின்றனர். நம்முடைய நாட்களில் நாம் காண்கிறதுபோல, நம் கர்த்தர் யாரொருவரையும் தம்முடைய ஊழியத்திற்கு கண்ணிவைத்து பிடிக்க விரும்பவில்லை. அதற்கு மாறாக, அவர் மேலான மற்றும் நேர்மையான வழிமுறைகளை மேற்கொண்டார். ‘‘வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்’’. இது ஒரு காரியத்தை ஆராய்ந்து நிதானிப்பதற்கான ஒரு வேண்டுகோள். பாவ வியாதி உனக்கு இருக்கிறது என கண்டாயானால், என்னிடத்தில் வரலாம். நீ பிதாவினிடத்தில் வருவதற்காக நான் சித்தமும், உதவிசெய்யும் வழிமுறையையும் உடையவனாயிருக்கிறேன்.

ஜெப ஆலயத்தில் ஒரு வாலிப பிரபுவினிடத்தில் பேசிக்கொண்டிருந்தபோது, நம்முடைய ஆண்டவர் சீஷத்துவத்திற்கான நிபந்தனைகளை ஏற்படுத்தினார். இதைப்பற்றி அதிகம் கண்டுகொள்ளாதே; மேலும் இதை ஒரு முக்கியமான காரியமாக்காதே என அவர் பேசவில்லை. மாறாக, அர்ப்பணிப்பின் நிபந்தனைகள் எவை என விவரித்தார். தனக்குண்டான எல்லாவற்றையும் யாரொருவர் முற்றிலும் ஒப்புக்கொடுக்கவில்லையோ அவர் என்னுடைய சீஷராயிருக்க இயலாது. அவனுடைய முழு ஒழுக்கமுள்ள வாழ்க்கையிலும் முரண்பாடு உள்ளதை, இந்த ஐசுவரியமுள்ள வாலிபரிடத்தில் கர்த்தர் காண்பித்தார். அவன் பெற்றிருந்த செல்வத்தை கர்த்தருடைய மகிமைக்காக பயன்படுத்தவேண்டும். அவன் சுயநலமில்லாதவனாக இல்லாதபட்சத்தில், கிறிஸ்துவின் சீஷராக முடியாது.

நான் என்னுடைய குழந்தைகளுக்கு தேவையானவற்றை ஏற்பாடுசெய்யவேண்டும் என அந்த வாலிபர் கூறியிருக்கக்கூடும். ஆனால் உனக்குண்டானவற்றையெல்லாம் தேவனுக்கு கொடுத்துவிடு என கர்த்தர் அவனுக்குக் கூறினார். ஒரு பெற்றோர் தம்முடைய குழந்தைகளை அர்ப்பணிக்கமுடியும். ஆனால் கர்த்தரோ ஒருவன் செய்ய இயலாதவற்றை செய்யவேண்டும் என கூறமாட்டார். அதற்கு மாறாக, ஒருவன் அவருடைய சீஷனாக வேண்டுமானால், தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றி வரவேண்டும் என்கிறார் – மாற்கு 10:21.

மீண்டும் நம் கர்த்தர் கூறும்போது, ‘‘கலப்பையின்மேல் தன்கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய இராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல’’ என்கிறார்–லூக் 9:62. நம்முடைய எல்லாத் திறமைகளையும் பயன்படுத்த, நம் சிந்தையைத் தயார்ப்படுத்தவேண்டும். அவ்வாறு இல்லையெனில் ஒருபக்கம் ஒதுங்கி நின்றுவிடலாம். கர்த்தருடைய முறைமையே நம்முடைய வழிகாட்டியாக இருக்கவேண்டும். யாரொருவரையாவது கண்ணி வைத்துப் பிடிக்கவோ அல்லது மூளைச்சலவை செய்யவோ முயற்சிக்கக்கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவதனால், உலகப்பொருட்களை ஆதாயமாக்க முடியும் என முறையிடக்கூடாது. கிறிஸ்துவினிடத்தில் ஒருவன் வரவேண்டுமானால் சிலுவையின் வழியைத்தவிர வேறு வழியில்லை என ஜனங்களுக்கு தெரியப்படுத்தவேண்டும். வேறு யாதொரு வழியிலும் அவரை அடையமுடியாது. இதுவே கர்த்தருடைய வழியேயன்றி வேறு எந்த வழியுமில்லை. அவர் சிலுவை சுமந்தபடியே நாமும் சுமக்கவேண்டும். ஜனங்களை குறிவைத்து பிடிப்பதற்கு பதிலாக, அவர்களுக்கு தெளிவான சத்தத்தை செய்தியாக ஜனங்கள் முன்பாக வைப்பதன்மூலம் அவர்களுக்கு அதிக நன்மையை செய்திருக்கிறோம் என நம்புகிறோம். நிச்சயமற்ற எக்காள சத்தத்தின்மூலம் அவர்களை கண்ணியில் சிக்கவைக்க நாம் முயலக்கூடாது. இருந்தபோதிலும், அவர்கள் முன்பாக சோதனைகளையும் சிலுவைகளையும் வைத்தபோதிலும், அதன்பின் வரும் மகிமையையும் அவர்களுக்கு முன்பாக வைக்கிறோம்.

**அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்கு பொருந்தும் ஆதாரவசனம்**

ஏற்கனவே அர்ப்பணிப்பு செய்தவர்களுக்கான சிந்தனை என்னவெனில், இயேசுவை பின்பற்றுவதற்காக தேவனோடுகூட ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்திருக்கிறாய் என்பதேயாகும். உன்னுடைய சொந்த மாம்சீக சித்தத்தை விட்டுவிட்டாய், இதில் உன்னுடைய அழிவுக்குரிய சரீரமும் சேருகிறது என்பதை நினைவில் கொள்ளவும். அனுதினமும் மரிக்கும் ஒரு தொடர்ச்சியான வேலையாக உன்னுடைய சரீரத்தை ஒப்புக்கொடுக்கிறாய். இந்த பலியினாலான உடன்படிக்கையை உன் மனதின்முன் நிறுத்துவாயாக. ஏனெனில் அது இன்னும் நிறைவடையவில்லை. வெறுமனே உடன்படிக்கையை நிறைவேற்றுவேன் என்கிற வாக்குறுதி மட்டும் அதை நிறைவேற்றுதலாகாது.

பிதாவானவர் நம்மை பரிசுத்தஆவியினால் ஜெநிப்பித்து, கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக வருபவர்களுக்கே உரிய மாபெரும் சிலாக்கியங்களை நமக்குத் தருகிறார். பின்பு அனுதினமும் நம்முடைய வாழ்க்கையை அவருடைய ஊழியத்திற்காக ஒப்புக்கொடுத்து முன்னேறுவது நம்முடையதாயிருக்கிறது. அனுதினமும் உங்களுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுக்கவேண்டுமென அப்படிப்பட்டவர்களைப் பார்த்து அப்போஸ்தலர் கூறுவது எவ்வளவு பொருத்தமானதாயிருக்கிறது! உங்களுடைய

அழிவுக்குரிய சரீரங்களை கர்த்தருடைய ஊழியத்திற்காக பலியாக்கவேண்டுமென்பதை நினைவில் வைக்கவேண்டும். மனிதர்களாகிய பழைய சிருஷ்டிகளையே பலியாக்கவேண்டுமே தவிர, புதுசிருஷ்டிகளையல்ல. பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டதாக கருதப்படுகிற உங்களுடைய சரீரத்தையே ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதாகும், இது தொடர்ச்சியாக பலியிடப்படவேண்டும். அதை பாதுகாக்கவேண்டியோ, அல்லது உங்களுடைய நித்திய பொக்கிஷமாக ஆக்கிக்கொள்ளவோ அது தரப்படவில்லை. பதிலாக, உங்களுடைய சரீரத்தை பலியாக்கும் உடன்படிக்கையும் சிலாக்கியமுமாகும் ஆகவே அதை செய்யும்படி நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

**ஆதார வசனம் தற்காலிகமான நீதிமானாக்கப்பட்டோர்க்குப் பொருந்தும்**

நீதிமானாக்கப்பட்டிருந்தும் ஜீவ ஆற்றலில்லாது இருப்பவர்களுக்கு, இந்த ஆதாரவசனம் அர்த்தப்படுத்துவது என்னவெனில், நீங்கள் சபைகளில் நடக்கும் கூடுகைகளில் கலந்துகொள்ளுவதின்மூலம், அந்த விருப்பமானது வெளிப்படுகிறது. சபையில் இருக்கக்கூடிய பரிசுத்தவான்களோடு ஐக்கியப்படுவது நீங்கள் பரிசுத்தமான விஷயங்களை நேசிப்பதை உண்மையாகவே வெளிப்படுத்துகிறது. அதாவது, தேவனுடைய சித்தத்தை அறிய நீங்கள் விரும்புவதை அடையாளப்படுத்துகிறது. ஆகவே உங்களை தேவனுக்கென்று முழுமையாக தத்தம் செய்யவேண்டுமென்று உங்களை வேண்டிக்கொள்கிறேன். உங்களுடைய சரீரங்களை ஜீவபலிகளாக கருத்திற்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறேன். ஆனால் உங்களை நீங்களே மாய்த்துக்கொண்டு, உங்களது சரீரத்தை அழிப்பது அல்ல, அனுதினமும் உங்களுடைய சக்தியையும் ஜீவனையும் கர்த்தருடைய ஊழியத்திற்காக பயன்படுத்தப்படும் இச்சரீரம், ஒரு ஜீவனுள்ள பலியாக உள்ளது என அச்சரீரத்தை மேன்மையானதாக கருதவேண்டும்.

''உங்கள் சரீரங்களை ஒப்புக்கொடுக்கவேண்டும்'' என்ற புத்திமதியானது, உடன்படிக்கை செய்தவர்களுக்கும், கர்த்தரை இன்னும் அறிய பின்தொடர்கிறவர்களுக்கும் பொருந்துகிறதாயிருக்கிறது. அவ்வசனத்தின் அடுத்த வாக்கியம், பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமானதாயிருக்கும்படியான கருத்து சரிவர இசைவோடு புரிந்துகொள்ளப்படவேண்டும். இந்தக் கூற்றானது ஏற்கனவே உடன்படிக்கை செய்தவர்களுக்கும் தொடர்புள்ளதாக எடுத்துக்கொள்ளப்பட்டதேயானால், பின்பு அப்போஸ்தலர் கூறுவதுபோல், உங்களுடைய நீதிமானாக்கப்படுதலை வீரியமாக்கினதால், கர்த்தர் உங்களுக்கு அதை பரிசுத்தமானதாக்கித் தருகிறார். மேலும் கர்த்தர் உங்களை பரிசுத்தமானவர்களாக எண்ணுவதால், துவங்கப்பட்ட நற்கிரியைகள் முழுமையடையும்பொருட்டு, அவைகளை தொடர்ச்சியாக செய்யவேண்டும். அப்படிப்பட்ட பலியானது தேவனால் பரிசுத்தமும் பிரியமானதாக கருதப்படுவதால், அதினுடைய பலன்களானது மாட்சியும் மகிமையுமானதாயிருக்கும்.

இதே புத்திமதியை, தன்னுடைய அர்ப்பணிப்பை முழுமையாக நிறைவேற்றாமல் இருக்கிறவருடைய நிலைப்பாட்டில் இருந்து நோக்குவோமேயானால், இவ்வாறாக அதன் அர்த்தம் புரிந்துகொள்ளப்படும்; அர்ப்பணிப்பு என்கிற படியை நீங்கள் எடுப்பீரானால், கிறிஸ்துவின் புண்ணிய கிரயம் உங்கள்மேல் செலுத்தப்படும் என நினைவில் கொள்ளவேண்டும். கிறிஸ்துவுக்குள்ளாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த ஏற்பாட்டின்படி தேவன் உங்களை ஏற்றுக்கொள்கிறார்.

**மரணபரியந்தம் செய்யப்படும் அர்ப்பணிப்பே மகா புத்திசாலித்தனமானது**

தேவனுடைய இரக்கங்களையும் ஆசீர்வாதங்களையும் கண்டு உணர்ந்துகொள்ளும் ஒவ்வொருவரும், அவருக்காக ஊழியம் செய்யும் அருமையான சிலாக்கியத்திற்காக, உலகக்காரியங்களை பலியாக்குவது ஒரு ''புத்தியுள்ள ஆராதனை''யாக காண்பர். இயேசுவானவர் பரலோக மகிமையைவிட்டு ஒரு மனிதனாக வந்து, தம்மைத்தாமே மரணபரியந்தம் தியாகபலியாக்கியது அவருக்கு ஒரு புத்தியுள்ள ஆராதனையாயிற்று. எனவே நம்முடையதும் கண்டிப்பாக மிக புத்தியுள்ள ஆராதனையாகும். நாம் பரிபூரணமில்லாதவர்களாயிருப்பதால், நம்மிடத்தில் தருவதற்கு மிகக் குறைவானவைகளே உள்ளது; பரலோகப்பிதாவை நாம் உயர்வாக மதிப்பதை வெளிப்படுத்துவதற்கு,நமக்கு ஒரு வாய்ப்பு இருக்குமானால், அவ்வாய்ப்பை பயன்படுத்துவதற்காக தீவிரிக்க வேண்டும்.

பிதாவானவர் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் புத்தியுள்ள ஆராதனையைத்தவிர வேறொன்றையும் ஆலோசனையாக தந்திருப்பார் என நாம் எண்ணிக்கொள்ள முடியாது. எதிர்கால வாழ்க்கைக்கான எந்த ஒரு வெகுமதியுமின்றி மனுக்குலத்திற்காக தம்முடைய ஜீவனைத் தர இயேசுவினிடத்தில் கேட்கப்பட்டிருக்குமானால், அது மிகவும் பகுத்தறிவுக்கொவ்வாத காரியமாக இருந்திருக்கும். அவருடைய கீழ்ப்படிதலுக்கு ஈடாக பிதாவானவர் நம்முடைய மீட்பருக்கு முன்பாக மகா சந்தோஷத்தை வைத்திருந்ததைப் போலவே நமக்கும் வைத்திருக்கிறார். தற்காலத்தில் நமக்காக எந்தவிதமான வெகுமதியும் பெறாமல், நம்மை பலிசெலுத்தும்படி கர்த்தர் நம்மை அழைப்பதில்லை. இவைகளைச் செய்தால் நம்மை தம்முடைய குமாரனோடுகூட உடன் பங்காளிகளாக்குவேன் எனவும்

இராஜ்யத்தின் அவருடைய எல்லா சந்தோஷங்களிலும் பங்குடையவர்களாக்குவேன் என்றும் நம்மிடம் கூறுகிறார்.

**அர்ப்பணிப்பு செய்தல் அல்லது உடன்படிக்கை**

சகோதரரே என்கிற வார்த்தையானது, இருவேறு நிலைப்பாட்டிலிருந்து நோக்கப்படவேண்டும். முதலாவதாக, நீதிமானாக்கப்படுவதற்கான மனநிலையை உடையவர்களாக, வருங்கால வாழ்வுக்குரிய நீதிமானாகுதலின் நிலையில் உள்ளோர்க்கு அதை பொருத்தலாம். மேலும் தேவனை நோக்கி இவர்கள் எடுக்கும் ஒவ்வொரு படியிலும் அவர்களுடைய நீதிமானாக்கப்படுதலானது வளர்வதாயிருக்கிறது. இன்னொரு வகையில் கூறுவோமேயானால், முழு அளவில் சகோதரர்களாக ஆனவர்களையே இது குறிக்கின்றது. எவ்வாறெனில் அர்ப்பணிப்பு என்கிற நிலையை எடுத்ததுடன், அவர்களது அந்த அர்ப்பணிப்பானது கர்த்தராகிய இயேசு மூலமாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக இருக்கிறவர்களைக் குறிக்கிறது. இவர்களிடத்தில் அனுதின தொடர்ச்சியான ஒப்புக்கொடுத்தல் என்பது இருக்கும். ஒவ்வொரு நாளும் காலையில் கர்த்தருக்கு முன்பாக நம்மை ஒப்புக்கொடுப்பதுடன், நாள்முழுவதும் அவருடைய ஆசீர்வாதத்தை கேட்கிறவர்களாயிருக்கிறோம். அந்த ஒப்புக்கொடுத்தலானது நாளுக்கு நாள் நேரத்துக்கு நேரமாக இருக்கிறது. இந்த வழியில் சுயசித்தத்தை நிலையாக சரணாகதியடைய செய்வதாயிருக்கிறது. இந்த வகையில் கர்த்தருக்கு முன்பாக அனுதினமும் அசைவாட்டும் பலியை நாம் காணிக்கையாக்குகிறோம். இவ்வாறே நம் கர்த்தராகிய இயேசுவினிடத்திலும் இருந்தது. ஆரம்பத்தில் மாத்திரம் அவர் முழு அர்ப்பணிப்பு செய்யாமல், கல்வாரியில் தம்முடைய பலியானது முடியும்வரை நாளுக்குநாள் தம்முடைய ஜீவனைக் கொடுத்தார்.

ஒருவர் தன்னுடைய நேரத்தையும் தாலந்துகளையும் அர்ப்பணிப்பு செய்துவிட்டு, பின்பு தம்முடைய பலிகளைசெய்யாமல் நிறுத்திக்கொள்வாரானால், பிதாவானவர், எதற்காக அவரை ஓட அழைத்தாரோ, அந்த மகா பெரிதான பரிசை அவர் ஆதாயமாக்கமாட்டார் என உறுதியாக கூறலாம். திரளான கூட்டத்தின் வகுப்பாரோ, தங்களுடைய சரீரங்களை ஒப்புக்கொடுத்தபின்பு, தங்களுடைய நேரம், செல்வாக்கு, பணம் ஆகிய எல்லாவற்றையும் கர்த்தருடைய ஊழியத்திற்கென்று ஒப்புக்கொடுக்காமல், வாய்ப்புக்களை நிராகரிக்கிறவர்களா–யிருக்கின்றனர். இந்த நிராகரிப்பானது சிங்காசனத்தில் அவர்களுக்குரிய இடத்தை இழக்க வைப்பதுடன், மணவாட்டி வகுப்பாரில் பங்குபெறும் சிலாக்கியத்தையும் இழக்க வைக்கும். ஆனால் மணவாட்டி வகுப்பாரோ, ஆரம்பத்தில் தங்களுடைய சரீரங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக மாத்திரமல்ல, மரணபரியந்தம் தொடர்ச்சியாகவும் உண்மையாகவும் ஒப்புக்கொடுத்தவர்களாக இருப்பர்.

**தேவனுடைய இரக்கங்களால் கட்டுப்படுத்தப்படல்**

நாம் ஏன் நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று அப்போஸ்தலர் கூறுகிறாரெனில், தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டே அவ்வாறு கூறுகிறார். ‘‘உங்களுடைய சரீரங்களை ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்கிறேன்’’. தேவனுடைய இரக்கங்களானது ஒரு குறிப்பிடத்தக்க அளவு எல்லார்மேலும் உள்ளது. நல்லார்மேலும் பொல்லார்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, தம்முடைய மழையைப் பொழிகிறார். அநேக நூற்றாண்டுகளாக தேவனுடைய விசேஷமான இரக்கங்களானது யூதர்களுக்கு மட்டுமே அருளப்பட்டது. ஆனால் தேவனுடைய தயவானது தற்போது புறஜாதிகளுக்கும் யூதர்களுக்குமான தெய்வீக திட்டத்தின் ஏற்பாடாக உள்ளது. தேவன் கிறிஸ்துவின் மூலமாக தடையாக நின்ற தடைச்சுவரைத் தகர்த்து, எல்லா மனிதரும் மீண்டும் தம்மோடு இசைவாகும் வாய்ப்பளித்து, தாமே அவர்களுடைய பிதாவாகவும், ஜீவனளிப்பவராகவும் கிறிஸ்துவின்மூலம் ஆசீர்வாதங்களை பகிர்ந்துகொள்ளவுமான ஏற்பாடு செய்திருக்கிறார்.

காண்கிறதினாலும் கேட்கிறதினாலும் எத்தனைபேருடைய மனக்கண்கள் திறக்கப்படுகிறதோ, அவர்கள் கர்த்தருக்காக தங்களை முற்றிலும் தத்தம்செய்து ஒப்புக்கொடுக்கவேண்டியதன் காரணத்தை சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். அப்போஸ்தலர் குறிப்பிட்டுள்ளபடி இது மிகவும் புத்தியுள்ள ஆராதனையாகும். மேலும் இதோடுகூட தேவன் இணைத்திருக்கிற வெகுமதியானது வாக்குக்கெட்டாததும், விலையேறப்பெற்றதுமாகும். தேவனுடைய ஆச்சரியமான புண்ணியங்களை ஏற்றுக்கொண்டபின்பு, அதோடுகூட இணைக்கப்பட்டிருக்கிற நிபந்தனையின்படி வாழாமல், நிராகரித்தல் என்பது மிகவும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும். உண்மையாகவே நாம் தேவன்பேரிலும், அவருடைய மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள் பேரிலும் நம்பிக்கையும், முறையான விசுவாசமும் உள்ளவர்களாயிருப்பின், அதிலுள்ள எதிர்பார்ப்புக்களை மகிழ்ச்சியோடும் உண்மையோடும் சந்திக்கிறவர்களாவோம்.

ஒரு பெண்மணி சமீபத்தில் எங்களிடம் கூறியதாவது ; ‘‘நாங்கள் எங்களுடைய சபையில் செய்வதைவிட தேவ பக்தியுள்ள வாழ்க்கையைப்பற்றி நீங்கள் வலியுறுத்துகிறீர்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என நீங்கள் விசுவாசத்தைக் குறித்து விசேஷமாக வலியுறுத்துகிறீர்கள்’’ என்றார். ஆம், நம்பிக்கை என்கிற வார்த்தையானது, எல்லாக் காரியத்திலேயும் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது என நாம் பதிலுரைக்கிறோம். ஒருவேளை

நாங்கள் உங்களிடம், “ இன்று நீங்கள் வீட்டிற்கு திரும்பும்வழியில், ஒரு குறிப்பிட்ட எண்ணுடைய வீட்டிற்கு சென்றால், அங்கே ஏறுபடிகளுக்கு கீழேயுள்ள குறிப்பிட்ட மூலையில், விலையுயர்ந்த பொக்கிஷமுள்ள ஒரு சிறு பையை நீங்கள் காண்பீர்கள், அது உங்களுக்குரியதாக இருக்கிறது. எங்களுடைய வார்த்தைகளை நீங்கள் நம்பினால் நீங்கள் அங்குசென்று அந்த பையை பெற்றுக்கொள்ளலாம்”. அப்போது, உங்களை நான் நம்புகிறேன் என்று சொல்லிவிட்டு, முற்றிலும் வேறு வழியில் நீங்கள் சென்றுவிட்டால், நீங்கள் எங்களை நம்பவில்லை என எங்களால் உறுதியாக கூறமுடியும். உங்களுடைய செயல் அதை நிரூபிக்கிறது.

தற்போது “அழியாததும் கறைதிரையற்றதும் வாடாததுமான சுதந்திரத்தில்” இயேசுக்கிறிஸ்துவோடுகூட உடன்பங்காளிகளாக இருப்பதற்கான வாய்ப்பை தேவன் நமக்கு அளித்திருக்கிறார். இந்த உண்மையை நாம் நம்பினோமாகில், அதற்கே உரிய நிபந்தனைகள் எவை என தேடுவோம். உண்மையாகவே அதை நம்புகிற யாவரும் அந்த மாபெரும் வெகுமதியோடு ஒப்பிடும்போது, அந்த நிபந்தனைகளானது மிகவும் எளிமையானவை என காண்பர். ஆனால் அந்த மாபெரும் பரிசை வெல்ல அவர் மிகுந்த பிரயாசம் எடுக்கத் தவறினால், அந்த செய்தியை அவர் நம்பவில்லை என காண்பிக்கிறது. ஏனெனில் அவர் அந்த சிலாக்கியத்தை உணர்ந்து நம்பினால், பாரமான யாவற்றையும் நம்மை நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, கிரீடத்தைப் பெறவேண்டி, கடைசிவரை பொறுமையோடு கண்டிப்பாக ஓடுவர் – எபி 12:1,2.

**நம்முடைய காணிக்கையின் முழுமை**

எனவே இது ஒரு புத்தியுள்ள ஆராதனையாகும். அப்போஸ்தலர் அதற்குரிய நிபந்தனைகளை கூறுகிறார். இந்த மாபெரும் ஆசீர்வாதத்தை பெற விரும்புவோர் தங்களை பரிசுத்தமும் தேவனால் ஏற்றுக்கொள்ளப்படும் ஜீவபலிகளாக ஒப்புக்கொடுக்கவேண்டும். இது நம்முடைய சரீரங்களை நாமே ஒப்புக்கொடுப்பதாகும். புதுசிருஷ்டியானது ஒப்புக்கொடுத்தலை செய்வதில்லை. சரீரமானது ஒப்புக்கொடுக்கப்படும் நேரத்தில், அங்கே புதுசிருஷ்டியே இருப்பதில்லை. நம்முடைய சுபாவ சிந்தையானது அதிக மேன்மையான வழியை கர்த்தருடைய செய்தியிலிருந்து உணர்ந்தால், அதாவது கர்த்தரோடுகூட இசைவாக இருக்கும் வழியை உணர்ந்துகொண்டால், அவ்விதமாக அவரோடுகூட இசைவாக இருக்க முன்வர விருப்பப்படவேண்டும். மேலும் அந்த புதிய அல்லது மாறியிருக்கிற சித்தமானது நம்முடைய பூமிக்குரிய விருப்பங்களையும் நம்முடைய எல்லாவற்றையும் பலியின் வாழ்க்கையில் ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்மை நாமே கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கும்போது நம்முடைய முழு மனுஷீகத்தையே தருகிறோம். பின்பு நாம் புதிய மனதிற்காக, நம்பிக்கைக்காக புது சிருஷ்டிகளாக ஜெநிப்பிக்கப்படுகிறோம்.

நாம் நம்மை தேவனுக்கென்று ஒப்புக்கொடுக்கும்போது, அவரிடத்தில் நேரடியாக நம் காணிக்கையோடு வருவதில்லை. மகா பிரதான ஆசாரியன் மூலம் நாம் வருகிறோம். நிழலில் காண்பதுபோல, பிரதான ஆசாரியனே கர்த்தருக்கென்று சீட்டுவிழுந்த ஆட்டை பலியாக்குகிறார். நாம் மீட்பரின் மூலமாகவே பிதாவானவரிடம் வருகிறோம். நாம் நம்முடைய எல்லா பாவங்களோடு வருவதால் ஒரு நீதியுள்ள பலியை செலுத்துவதில்லை. எனவே நமக்காக சுத்திகரிக்கப்படுவதற்கான ஊற்று திறந்திருக்கிறது. நம்முடைய இருதயத்தின் உணர்வானது இவ்வாறு இருக்கும்;

இதோ, நான் நானாகவே வந்திருக்கிறேன்,

எனக்கென்று வேண்டுதல் செய்ய எவருமில்லை,

ஆனால் உம் இரத்தம் எனக்காக சிந்தப்பட்டது,

உம்மிடத்தில் வரும்படி கட்டளையிட்டீர்

தேவ ஆட்டுக்குட்டியே, இதோ நான் வந்திருக்கிறேன்.

ஆனால் அந்த பரிபூரணமில்லாத நிலையில் தேவன் ஒரு பலியை ஏற்றுக்கெள்ளக்கூடாததாயிருக்கிறது. ஆசாரியர் மூலமாக வந்தால் மாத்திரமே நம்மைஅங்கீகரிக்கிறார். நாம் ஒருவேளை பரிபூரணமானவர்களாக இருந்தால், நம்முடைய சொந்த நாமத்தினாலேயே வரலாம். ஆனால் நாம் அபூரணராயிருப்பதினால் பிரதான ஆசாரியராயிருக்கிற இயேசுவின் மூலமாகவே வருகிறோம். பின்பு பிரதான ஆசாரியர் தம்முடைய புண்ணியகிரயத்தை செலுத்தி, நம்முடைய பலியையும் தம்முடைய சொந்த பலியின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள்கிறார். பின்பு தெய்வீக ஆசீர்வாதமாகிய பரிசுத்தஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் நம்மேல் வருகிறதாயிருக்கிறது.அதுமுதல் நாம் கிறிஸ்துவுக்குள்ளான புதுசிருஷ்டிகளாகிறோம். இவ்விதமாக தேவனுடைய வழியில் நாம் ஒப்புக்கொடுப்பதால் அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**ஏற்கமறுப்பது, உயர்வாக மதிக்காததை காண்பிக்கிறது**

இப்போது நாம் மரித்திருக்கிறோம். நம்முடைய ஜீவன் கிறிஸ்துவுக்குள்ளாக தேவனிடத்தில் மறைந்திருக்கிறது. நம்முடைய சரீரங்களை நாம் ஒப்புக்கொடுக்கும்போது, அவைகள் ஜீவபலிகளாக்கப்–படுகிறது. பின்பு அவைகள் கிறிஸ்துவோடுகூட கொல்லப்படுகிறதினால், தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நாம் ஒரு புதிதான ஜீவனுக்கேதுவாக எழுந்து நடக்கிறோம். சரீரம் எனும்போது நம்முடைய பூமிக்குரிய விருப்பங்களைக் குறிக்கிறது. தற்காலத்திலும், கடந்தகாலத்திலும்,

வருங்காலத்திலும் நாம் பெற்றிருக்கிற அல்லது பெறப்போகிற ஒவ்வொரு விருப்பத்தையும் குறிக்கும். அப்படிப்பட்ட ஒருவர் எதிர்கால திரும்பக் கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்காக தம்முடைய எல்லா நம்பிக்கைகளையும் எல்லா உரிமைகளையும் விட்டுக்கொடுப்பார். உடன்படிக்கையானது முழுமையான ஒன்று. அப்படிப்பட்டவர்களுடைய பலியில் இயேசுவின் புண்ணியக்கிரயம் செலுத்தப்பட்டவுடன் அது பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமானதாகவும் மாறும். பின்பு நம்முடைய காணிக்கையானது முடிவுவரை ஏற்றுக்–கொள்ளப்பட்டதாகவே இருக்கும். மேலும், கர்த்தருடைய ஊழியத்தில் நாளுக்கு நாள் நம்முடைய ஜீவனைத் தரும்போது, அதிகமதிகமான கர்த்தருடைய ஆசீர்வாதங்களை கொண்டுவருவதுடன், நாம் அவருடைய ஆவியினால் அதிகமதிகமாக நிரப்பப்பட்டிருப்போம்.

நம்முடையதெல்லாவற்றையும் கர்த்தருடைய ஊழியத்துக்கென்று நாம் தருவது மிகவும் புத்தியுள்ள ஆராதனை மட்டுமல்ல, நம்முடைய பலியானது மிகமிக சிறியதாகும். நம்மிடத்தில் வெளியாக்கப்பட்ட அவருடைய ஆச்சரியமான பரிவிரக்கம் மற்றும் கிருபையைக் காட்டிலும், நாம் மனமுவந்து செலுத்தும் பலியானது மிகமிக குறைவானதாகவே இருக்கிறது. நம்முடைய ஏழ்மையான வாழ்க்கைக்கு ஈடாக, தேவன் நமக்கு மாபெரும் வெகுமதி மற்றும் ஆசீர்வாதங்களை அளிக்கும்போது, இந்த சலுகையை ஏற்றுக்கொள்ள மறுத்தோமானால், நித்திய நன்மையைப் போற்றக்கூடாத பரிதாப நிலைமையின் அறிகுறியாக இது இருப்பதோடு அல்லாமல், மனதின் பெலவீனத்தையும் காண்பிக்கிறது. இந்த குறுகியகால வாழ்க்கையில் சுயவிருப்பத்தின்படியான தற்காலிக மற்றும் அற்பமான இன்பங்களோடு, தெய்வீக மட்டத்தின் மகிமை, நித்திய மகிழ்ச்சி, மற்றும் ஆசீர்வாதங்களோடு ஒப்பிட்டு சீர்தூக்கிப் பார்க்க இயலவில்லையெனில், அது ஒரு சிறுபிள்ளைத்தனமான நிதானிப்பையே காண்பிக்கிறது. மேலும் அந்த மகிமையானது, தூதர்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், வல்லமைகளானாலும் அவைகளுக்கு மிகமிக மேலானதாக உள்ளது. எல்லா நாமங்களுக்கும் மேலான மகிமையின் கர்த்தரும் தலையுமானவருக்கு அடுத்தபடியாக உள்ள நிலைமையாகும். எந்தவொரு மனித மனத்தினாலும், அதினுடைய நித்தியத்தை புரிந்துகொள்ள முடியாத, மிகவும் மகிமையான, மிக உன்னதமான இடமாகும். எனவே நாம் மரணபரியந்தம் உண்மையுள்ளவர்களாயிருப்போமாக

————————

**R 993**

# உண்மையுள்ள ஊழியனின் ஜெபம்

## THE FAITHFUL SERVANTS PRAYER

தேவனே, என்னிடம் பேசும், என்னிடம் பேசும்;
தவறிழைத்து காணாமற்போய் தனிமையில் அலைந்துதிரிந்திடும்
உம் குழந்தைகளை, நீர் தேடிய வண்ணமே
நானும் தேடிடவேண்டுமே
நடத்தும் எனையே தேவனே, வழிநடத்தும் எனையே,
இலக்கின்றி அலைந்து திரிந்திடும் பாதங்கள் தனையே
நானும் நடத்திடவேண்டுமே,
போஷியும் தேவனே போஷியும் எனையே,
பசியோடிருக்கும் ஆத்துமாக்களுக்கே
சுவைமிகுந்த மன்னாவை
நான் ஊட்டிவிட வேண்டுமே!
வலிமையாக்கும் எனையே, வலிமையாக்கிடும் தேவனே,
நான் பாறைமீது நிற்கும்போதும், உம்மில் உறுதியாகவே
ஊன்றி நிற்கவேண்டுமே,
அலைகின்ற கடலினிலே என்னுடன் மல்யுத்தம்
செய்பவர்களினின்றே பிரித்தெடுத்தே
அணைத்துக் கொள்ள வேண்டுமே,
போதியும் எனக்கு போதியும் தேவனே,
பொக்கிஷமான காரியங்களையே நான்
பிறர்க்கு போதித்திட வேண்டுமே,
என் வாயினின்று புறப்படும் வார்த்தைகளுக்கு
இறக்கைகள் சென்றடையவேண்டுமே
உம்முடைய இனிமைமிகு ஓய்வுதனை எனக்குத் தாருமே,
நான் ஆறுதல் மிகுந்தஆற்றல் வாய்ந்த
உம் வார்த்தைகளையே காலத்திற்குகந்தவாறு
உம்மிடமிருந்து பெற்றே,
களைப்படைந்த சிலருக்காகவே
தேவையான நேரம்தனிலே பேசிடவே வேண்டுமே
உந்தன் முழுமையை எனக்குள் நிரப்பிடும் எந்தன்தேவனே,
என் இருதயம் பொங்கி வழிந்திடும் வரையினில் நிரப்பிடுமே,
எரியூட்டப்பெற்ற சிந்தனைகளுடனும்,
ஒளிருகின்ற வார்த்தைகளுடனும்
உந்தன் அன்பை உரைத்திடவும்
உம் புகழை காட்டிடவும் வேண்டுமே,
பயன்படுத்தும் தேவனே, பயன்படுத்தும் என்னையும்,
நீர் விரும்பும் வண்ணமே, எங்கேயும் எப்போதும் நான்
உந்தன் ஆசீர்வாதமான முகத்தினைக்காணும் வரையிலே,
உந்தன் ஒய்வுதனை, உந்தன் மகிழ்ச்சிதனை,
உந்தன் மகிமைதனை பகிர்ந்திடவே
என்னைக்கூட பயன்படுத்தும் தேவனே!

————